உண்மையான இறைவனை தேடுபவரா நீங்கள்?

(இவர்களைப் போல)



வெளியீடு

MASFOT
Raise Yourself To Help Mankind
NABA
MAS FOUNDATION TRUST

MAS Foundation Trust
Thacker Street
Purasawalkam
Chennai
88388 92393

உலகம் படைக்கப்பட்டு முதல் மனிதன் ஆதமின் உருவாக்கத்திற்கு பின் மூன்று முக்கிய கொள்கைகளை முன்னிறுத்தியே இறைவன் இந்த உலகத்தை இயக்குக்கிறான். இன்னும் இவ்வுலகம் முடிவு (அழிவு)க்கு வரும் வரை இவ்வாறே இயங்கும். அந்த மூன்றையும் கீழ்கண்ட புத்தகங்கள் மூலம் நீங்கள் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். தவறாமல் படிக்கவும். உங்கள் சந்ததிகளையும் படிக்க ஆர்வமூட்டவும்.



ஏகத்துவம்



தூதுத்துவம்



மரணத்திற்குப் பின்

உண்மையான இறைவனை தேடுபவரா நீங்கள்?

வெளியீடு

MAS Foundation Trust
19 Thacker Street
Purasawalkam
Chennai 600 084
88388 92393

பதிப்புரை

டெக்னாலஜி வளர வளர மனிதனுக்குள்ளும் தேடுதல் அதிகமாகிக் கொண்டே வருகிறது கண்டிப்பாக எப்படியாவது நாம் தேடும் உண்மையான இறைவனை கண்டு பிடித்தே ஆக வேண்டும், கண்டுபிடிக்க சாத்தியமே என்பதை ஆள் மனது சொல்லிக் கொண்டே இருக்கிறது அதற்கு தகுந்தார் போல் நம் கேள்விகளுக்கும் விடை அவ்வப்போது பகுதி பகுதியாக அங்கொன்றும் இங்கொன்றுமாக டெக்னாலஜி மூலமாகவும், சோசியல் மீடியா மூலமாகவும், காதில் விழும் செய்திகள் மூலமாகவும் வந்து கொண்டே இருக்கிறது.

நாம் தேடும் அந்த இறைவன் யார்?, எது தான் உண்மை?, ஏன் இந்த உலக வாழ்க்கை?, எப்படித்தான் இந்த உலகத்தில் வாழ வேண்டும்?, இதையெல்லாம் அலசி ஆராய்ந்து எப்பொழுது தான் நாம் கண்டுபிடிக்க போகிறோம்?, இருக்கிற பிஸியில கண்டுபிடித்து விடுவோமா?, இதற்கிடையில அல்ப ஆயுசுல மரணம் வேற அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்ந்து கொண்டே இருக்கிறது, இந்த சிந்தனை எல்லாம் தேவையா? வந்தம்மா, வாழ்ந்தமா, போய்ச் சேர்ந்தமா? அப்படின்னு கண்டும் காணாமலும் இருந்திடலாமா?

இந்த மாதிரி அடிக்கடி யோசிப்பவரா நீங்கள்?

நல்லது. நீங்கள் சரியான பாதையில் தான் சிந்தித்து இருக்கிறீர்கள்.

உங்களைப்போல் அடிக்கடி சிந்தித்து, தவித்து, அலைந்து, தேடி, , விடாமுயற்சி செய்து, அலசி ஆராய்ந்து, கண்டுபிடித்த விடைகளையும், பெற்ற பலன்களையும், இன்பங்களையும், எல்லாவற்றிற்கும் மேலாக தான் அறிந்ததின் மூலமாக அவர்கள் பெற்ற மன நிம்மதியையும்தான் நீங்கள் படிக்கப் போகிறீர்கள்.

இது உங்களை தெளிவான ஒரு பாதையை நோக்கி கொண்டு செல்லவும், மேலதிக ஆராய்ச்சி பண்ணவும், சிறந்த முடிவு எடுக்கவும் மிக்க உறுதுணையாக இருக்கும்.

பல சூழ்நிலையில், பல காலங்களில் தேடி கண்டுபிடித்தவர்களையும், தேடுபவர்களையும் ஒன்றிணைக்கும் சிறு முயற்சியே இந்நூல்.

படித்துப் பாருங்கள் நீங்கள் தேடும் உண்மை உங்களை இதன் மூலம் அதன் பால் ஈர்க்கட்டுமாக!

MAS Foundation Trust

உள்ளே....

1. சதீஸ்குமார்
2. மதன் பாலாஜி
3. கிரண்
4. அமர்நாத்
5. அபிமன்யூ
6. லோகேஸ்வரன்
7. ஏழுமலை
8. டாக்டர் ஜெஃப்ரி லேங்
9. கே.எஸ். கிரீஷ்
10. ஆமையடி மகேஷ்
11. சிவாஜி ராவ்
12. சிவ சண்முகம்
13. செந்தில் குமார்
14. ஹெலினா
15. வாசுகி
16. கண்ணன்

சதீஷ் குமார்



எனது பெயர் சதீஷ் குமார். நான் ஐந்து வருடங்களுக்கு முன்பு கம்ப்யூட்டரில் ராமாயணம் பார்க்கலாம் என்று youtube-ல் தேடினேன். அப்பொழுது youtube-ல் ஹிந்து மதம் மற்றும் இஸ்லாமின் ஒற்றுமைகள் என்ற தலைப்பின் கீழ் ஒரு வீடியோ காணக் கண்டேன். அதில் இஸ்லாத்தின் ஓர் இறைக் கொள்கையும் இந்து மதத்தில் வேதங்களில் உள்ள ஓர் இறைக் கொள்கையும் மற்றும் முகமது நபி அவர்கள் தான் கல்கி அவதாரம் என்றும் அந்த வீடியோவில் காணக் கண்டேன் அதன் மூலம் இந்து மதத்தில் ஓரிறைக் கொள்கை வேதங்களில் இருப்பதை அறிந்தேன். இதனால் இந்து மதத்தை அதிகமாக அறிய முனைந்தேன் அதில் உள்ள இறைவன் ஒருவனே என்பதை வேதங்கள் தெளிவாக கூறுகின்ற காரணத்தினால் இஸ்லாத்தின் ஓரிறைக் கொள்கையும் சமமாக இருப்பதை உணர்ந்து அதிக ஆர்வம் கொண்டேன். இறுதியில் அனைத்து வேதங்களுக்கும் இறுதியான வேதமாக திருக்குர்ஆன் விளங்குவதை உணர்ந்தேன். இதனால் திருக்குர்ஆனை முழுமையாக படிக்க முயற்சி செய்து இந்து மதத்தின் பரம்பொருளான இறைவனும் இஸ்லாம் கூறும் அந்த இறைவனும் ஒருவனே என்பதை கண்டறிந்தேன். இறுதி நபி அல்லது இறுதி ரிஷி அவர்கள் முஹம்மது நபி தான் என்பதை உணர்ந்து இறைவனுக்கு அடி பணிந்தேன் அதுதான் இஸ்லாம்.

மதன் பாலாஜி.



எனது இயற்பெயர் மதன் பாலாஜி. பிராமண வகுப்பு சார்ந்த நான் ஆன்மீகத்தில் ஓரளவு ஈடுபாடு கொண்டிருந்தேன். சில வருடங்களுக்கு முன், நண்பர் ஒருவரிடம் மதம் மற்றும் இறைவன் சார்ந்த விஷயங்களை பேசிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அவரும் ஒரு இந்து மதத்தில் இருந்து இஸ்லாத்துக்கு வந்தவர் என்பதை உணர்ந்தேன். ஆதலால் அவரிடம் விவாதித்தேன். பிறகு தமிழாக்கம் செய்யப்பட்ட திருக்குர்ஆனை அவரிடம் கேட்டு பெற்றேன். அதில் என்ன தான் உள்ளது என்பதை அறிய ஆசைப்பட்டேன் . திருக்குர்ஆன் மூலம் இந்து மதத்தில் உள்ள வேதங்களையும் ஓரிறைக் கொள்கையும் அறிந்தேன். பிறகு கிறிஸ்தவ மதத்தில் உள்ள வேதத்தையும் படித்தேன். அதிலும் ஓரிறைக் கொள்கை இருப்பதை உணர்ந்த நான் மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். முதல் மனிதன் தோன்றிய காலம் முதல் பரம்பொருளேயே வணங்கி வந்தனர் என்ற உண்மையை உணர்ந்த நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன். இயேசுவைப் பற்றி குர்ஆன் பேசுவதை கண்டு மற்றும் மரியம் அவர்களைப் பற்றியும் ஒரு அத்தியாயமே உள்ளது என்பதை அறிந்து மிகவும் ஆச்சரியமடைந்தேன் மற்றும் இந்து வேதங்களுக்கும் பைபிளுக்கும் குர்ஆனுக்கும் உள்ள தொடர்பை உணர்ந்தேன். இறுதியான நபி முஹம்மது நபி என்பதை

உணர்ந்து இறுதியான வேதம் திருக்குரான் என்பதையும் உணர்ந்து இறைவனுக்கு அடி பணிந்தேன்.

அல்லாஹ் என்பது தனி ஒரு கடவுள் இல்லை அல்லது முஸ்லிம்களின் கடவுள் இல்லை என்பதை உணர்ந்தேன். நாம் அனுதினமும் கடவுளே, இறைவனே என்று சொல்லும் அந்த வார்த்தை தான் அரபியில் அல்லாஹ் என்பதை அறிந்து மகிழ்ச்சியுற்றேன்.

கிரண்



எனது பெயர் கிரண். நான் தெலுங்கு பிராமண வகுப்பை சார்ந்தவன். எனக்கு இஸ்லாமிய நண்பர் ஒருவர் இருந்தார். சிறுவயதிலிருந்தே அவர் தான் எனக்கு மிக நெருக்கமான நண்பராக இருந்தார் அவரது நடவடிக்கைகளும், பழக்க வழக்கங்களும் எனக்கு பல கேள்விகளை எழுப்பின. மேலும், அதை அதனை அதிகமாக அறிய முனைந்தேன். பல விளக்கங்களுக்கு பின் இறைவன் ஒருவனே என்பதை அறிந்தேன். என் உள்ளத்தில் ஒரு மன மாற்றம் ஏற்பட்டு இஸ்லாத்தை தழுவினேன்.

அமர்நாத்



எனது பெயர் அமர்நாத் பல வருடங்களுக்கு முன் ஒரு முஸ்லிம் பெண்ணை காதலித்தேன். அவளும் என்னை காதலித்தார். இருவரும் வீட்டை விட்டு ஓடிப் போய் திருமணம் செய்து கொள்ளலாம் என்று முடிவு எடுத்தோம். ஆனால் அதற்கு முன் அப்பெண் என்னை முஸ்லிமாக மாறச் சொன்னாள். முஸ்லிமாக மாறுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது எனக்கு புரியவில்லை. பிறகு இஸ்லாத்தை பற்றி அறிய விரும்பினேன். திருக்குர்ஆனை தமிழாக்கத்தில் முழுமையாக படித்தேன். அதில் கவரப்பட்டு என்னையே இழந்தேன். பிறகு நான் அப்பெண்ணை காதலித்தது எவ்வளவு பெரிய தவறு என்பதை உணர்ந்தேன். அப்பெண்ணிற்கு அவள் செய்தது எவ்வளவு பெரிய தவறான (ஹராமான) விஷயம் என்பதை உணர்த்தி பிறகு பெண்ணையும் என் காதலையும் கைவிட்டேன். அப்பெண்ணை விட இஸ்லாத்தை அதிகமாக நேசிக்க ஆரம்பித்தேன் முழுமையாக இறைவனிடம் என்னை சரணடைந்தேன்.

அபிமன்யூ



என் பெயர் அபிமன்யு நான் சென்னையில் எஸ்ஆர்எம் யூனிவர்சிட்டியில் மருத்துவ துறையின் பொது பிரிவில் படித்துக் கொண்டிருக்கிறேன் நான் எனது இளநிலை படிப்பை மதுரையில் படித்தேன் அப்போது நான் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தபோது எனக்கு ஹலால் மட்டும் ஹராம் (இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டது மற்றும் அனுமதிக்க படாதது) பற்றி தெரிய வந்தது. என் சிந்தனையில் இஸ்லாத்தில் அனுமதிக்கப்படாத அனைத்து விஷயமும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஒரு மனிதனுக்கு தீங்கு விளைவிப்பதையும், இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட விடையங்கள் எனது வாழ்வை உயர்த்துவதையும், மன அமைதியையும் தரும் என்பதை உணர்ந்தேன்.

அப்போது ஒரு முடிவை எடுத்தேன் நாம் ஒன்றை நமக்கு கற்றுக் கொடுக்கப்பட்டதால் வணங்கக்கூடாது (அதாவது எனது பெற்றோர் கற்றுத் தந்த வணக்க முறைகள், மற்றும் சிலையை வணங்குதல்) நாம் இதைப் பற்றி ஆராய்ச்சி செய்து எது உண்மை? எது சிறந்தது? எது பொருத்தமானது? என்பதை அறிய வேண்டும் என எண்ணினேன் இந்த ஆராய்ச்சி, தேடுதல் முடியும் வரை யாரையும் வணங்க வேண்டாம் என்ற முடிவை எடுத்தேன் நான் அனைத்து இறை சம்மந்தப்பட்ட நூல்களையும்

படித்தேன் உதாரணமாக வேதம், பைபிள், குர்ஆன் மற்றும் பல வீடியோக்களையும் பார்த்தேன் பல சிரத்துக்களை இன்டர்நெட்டில் தேடி வாசித்தேன்.

சில வருடங்களுக்குப் பிறகு அனைத்து அம்சங்களும் அதாவது வரலாற்று ரீதியாக, ஒழுக்க ரீதியாக, நெறிமுறைகள் ரீதியாக, அறிவியல் ரீதியாக, இஸ்லாம் தான் சிறந்தது என்ற முடிவுக்கு வந்தேன் இப்போது நான் ஒரு முஸ்லிமாக மாறி காலித் என்ற பெயரோடு மன அமைதியோடு அதைப் பின்பற்றி வருகிறேன் இதன் மூலமாக நான் கூற வருவது என்னவென்றால் நீங்களும் உண்மையான இறைவனை தேடுபவர்களாக இருப்பின் எளிதாக இது சம்பந்தமாக ஆராய்ச்சியில் ஈடுபடுங்கள். கண்டிப்பாக குரானை படியுங்கள்.

லோகேஸ்வரன்



என் பெயர் பிலால். முன்பு லோகேஸ்வரனாக இருந்தேன். நான் உண்மையில் யாரை வணங்க வேண்டும் என்று தெரியாமல் 1,50,000 க்கும் மேற்பட்ட கடவுள்களை வணங்கும் ஒரு இந்து குடும்பத்தில் பிறந்து வளர்ந்தேன். இந்த குழப்பத்தில் நான் கடவுள் நம்பிக்கையையும், அதனைச்சார்ந்த ஆர்வத்தை முற்றிலும் இழந்து, கடந்த சில ஆண்டுகளாக நாத்திகனாக வாழ்ந்தேன். பின்னர் நான் SRM யுனிவர்சிட்டிக்கு படிக்க வந்தேன். அங்கு நீங்கள் (ஒழுக்கம் சார்ந்த) தமிழ் மற்றும் இந்திய கலாச்சாரம் அல்லது எந்த வகையான மதம் சார்ந்த கட்டுபாடுகளையும் காண முடியாது.

அப்படிபட்ட சூழ்நிலையில் சில முஸ்லிம் மாணவர்களின் நடவடிக்கைகளும், ஒழுக்க மாண்புகளும், அவர்கள் வணங்கும் அல்லாஹ்வுக்கு (ஒரே இறைவனை குறிக்கும் அரபி வார்த்தை) பயந்து அதன்படி செயல்படுவதையும் கண்டு வியந்து, மேலும் தாமதிக்காமல் இஸ்லாத்தைப் பற்றி சில ஆராய்ச்சிகளைத் தொடங்கினேன். இஸ்லாம்தான் உண்மையான மதம், அல்லாஹ் (இறைவன்) ஒருவனே. உண்மையான கடவுள் அல்லாஹ் ஒருவன் மட்டுமே என்பதை அறிந்து கொண்டேன். வணக்கத்திற்கு தகுதியானவன் மற்றும் அவனுக்கு எந்த ஒப்பீடும் இல்லை.

மேலும் அல்லாஹ், ‘ வழி தெரியாமல் தொலைந்த

என்னை நேர்வழி படுத்தினான். சரியான பாதையில் 'அல்லாஹ் விரும்பினால் மட்டுமே இஸ்லாத்திற்கு திரும்ப முடியும்'. உண்மையான இறை தேடலில் உள்ள ஒவ்வொருக்கும் கண்டிப்பாக இறைவன் நேர்வழிகாட்டுவான்

இறுதியாக நான் இஸ்லாத்தை வாழ்வியலாக ஏற்றுக்கொள்ளவும் தயாராகிவிட்டேன்.புனித மாதமான ரமலான் மாதத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நான் இஸ்லாத்திற்கு திரும்பினேன். அன்றிலிருந்து என் வாழ்வின் இறுதி வரை எனது பிரார்த்தனைகள் அனைத்தும் அல்லாஹ்வை மட்டுமே சார்ந்ததாக வாழ்ந்து, முஸ்லிமாக மரணித்து சொர்க்கம் செல்வதே எனது ஒரே நோக்கம்.

கடைசியாக, இதை படிக்கும் நீங்களும் உண்மையான இறைவனை தேடுபவர்கள் என்றால் தாமதிக்காமல் உடனே குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்பு ஒன்றை வாங்கி படியுங்கள். தேடும் தெளிவையும், நாம் வணங்க வேண்டிய இறைவனையும் கண்டு கொள்வீர்கள்.

ஏழுமலை



என் பெயர் ஏழுமலை ஹிந்து வன்னிய குல சத்திரியர் ஆன நான் அரசு அறிஞர் அண்ணா கலைக் கல்லூரியில் பிஏ இங்க்லீஷ் படித்து இடை நின்றவன்.

எனக்கு இந்து மத கடவுள் நம்பிக்கை இருந்தது. நான் தீவிர பெருமாள் பக்தன் ஆஞ்சநேயர் வேடம் அணிந்து பஜனை குழுவுடன் நடனமாடி வந்துள்ளேன். உள்ளூர் மற்றும் வெளியூர்களுக்கு பஜனை குழுவுடன் சென்றுள்ளேன். திருப்பதிக்கு ஒருமுறை விழுப்புரத்திலிருந்து பாதயாத்திரை ஆக சென்றுள்ளேன். ஆறு முறை ரயில் வண்டி மூலம் பயணம்.

சபரிமலைக்கு ஒரு முறை பெரும் பாதையும் இன்னொரு முறை சிறிய பாதையும் சென்றுள்ளேன் பெரும்பாதை என்றால் மிகப்பெரிய மலைக்காடு, பள்ளத்தாக்கு, ஒற்றையடி பாதை கடந்து சென்று ஐயப்பனை தரிசிப்பது இவை மிகவும் சிரமமாகவும் இருக்கும். ஏனெனில் புலிகள் நடமாட்டமும் இருக்கும் சில இடங்களில் ஒற்றையடி பாதையில் அருகில் மிகப்பெரிய பள்ளத்தாக்கு இருக்கும் கால் தவறி விழுந்தால் மரணம்.

தீமிதி, திருவிழாக்களில் நெருப்பை பல முறை மிதித்துள்ளேன்

இப்படியாக அறியாமைக் கால மூடப்பழக்க

வழக்கங்களில் மூழ்கியவனாகவே நான் இருந்தேன்.

விழிப்புணர்வு அடைதல்

1. யூடியூப் சேனலில் திரு சிற்பி நாகன் அவர்களின் இந்து மத பண்டிகைகளும் அதன் மூடநம்பிக்கையும் என்பதை பற்றி தெளிவாக விவரித்திருந்தார். அதைப் பார்க்கக் கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது இது ஒன்று

2. பிராமணர்களின் சூழ்ச்சியும் எழுச்சியும் பற்றி ஓரளவு தெரிந்து கொண்டேன்.

3. விஸ்வரூபம் படம் புரியவில்லை ஏழு முறை பார்த்து முஸ்லிம்களை தவறாக புரிந்து கொண்டேன்.

4. பெரியாரின் பேச்சு மூலம் கற்ற, இன இழிவு நீங்க இஸ்லாமை நன்மருந்து.

5. டாக்டர் அம்பேத்கார் சொன்னது, இந்துவாகப் பிறந்தது குற்றமில்லை ஆனால் இந்துவாக இறப்பது மிகப்பெரிய குற்றம் இந்து மதத்தில் இருந்து வெளியேறுவது

6. திரு பழனிபாபா அவர்களின் தியாகம், அர்ப்பணிப்பு, உண்மை தன்மை, எனக்கு ரொம்ப பிடித்தது

7. P.J. என்பவரின் இஸ்லாம் பற்றிய கேள்வி பதில் நிகழ்ச்சி மூலம் நிறைய விளக்கங்களை தெரிந்து கொண்டேன். எனக்கு தெரிந்து இது போல open ஆக எந்த மதத்திலும் கேள்வி பதில் நிகழ்ச்சி நடப்பதில்லை. இது ஒன்றே இதன் உண்மை தன்மைக்கு சான்று.

இவை அனைத்தின் மூலம் ஆக இறைவன் ஒருவனே என்றும், உலகத்தார் அனைவருக்குமான எளிய மார்க்கம் இஸ்லாம்தான் என்ற விஷயங்களால் நான் கவரப்பட்டேன். என் பெயரை அஹமது என்று மாற்றி கொண்டேன்.

இந்த இஸ்லாம் மார்க்கத்தை எனக்கு கொடுத்த அல்லாஹ்வுக்கே எல்லா புகழும்.

இதை படிப்பவர்களுக்கு எனது வேண்டுகோள் என்னவென்றால், உங்களின் உண்மையான இறை தேடலுக்கு அருமருந்து குரானை படிப்பதே. அது உங்களை தெளிவு படுத்தும்.

டாக்டர் ஜெப்ரி லேங்



அமெரிக்காவின் கன்சாஸ் பல்கலைகழகத்தில் (University of Kansas) கணிதத்துறை பேராசிரியராய் இருப்பவர். தன் பதினாறு வயதிலிருந்து தன் 28 ஆவது வயது வரை நாத்திகராக இருந்தவர். இவருக்கு நேர்ந்த மனமாற்றத்தை அவரே கூறுவதைக் கேட்போம்:

ஒருநாள் ஓய்வு நேரம். என்னிடம் இருந்த அனைத்து புத்தகங்களையும் படித்தாகி விட்டது, புதிதாக படிப்பதற்கு ஒன்றுமில்லை. அப்போது, மேசையில் இருந்த குரான் கண்ணில் பட்டது.

வீட்டில் போரடிக்கும் போது, ஒரு வார இதழை எடுத்து நாலு பக்கங்களை புரட்டி பின்னர் வைத்துவிடுவோமே, அதுபோல நினைத்துதான் குரானைத் திறந்தேன்.
குர்ஆனில் குறை கண்டுபிடிக்க வேண்டுமென்ற எண்ணமெல்லாம் இல்லை. என்னைப் பொறுத்தவரை கடவுள் இல்லை, அவ்வளவுதான். இது மற்றுமொரு புத்தகம், அவ்வளவே...
முதல் அத்தியாயத்தை பார்த்தேன், அல் பாத்திஹா என்றிருந்தது. அதில் ஏழு வசனங்கள். நல்ல அழகான, கோர்வையான வசனங்கள். முஸ்லிம்கள் குரானை இறைவேதமென்று சொன்னாலும், என்னைப் பொறுத்தவரை அது மனிதரால் எழுதப்பட்டது. அதனால், இந்த புத்தகத்தை எழுதியவர் நல்ல இலக்கியவாதி என்று பாராட்டினேன். நல்ல புத்திசாலி என்றும் நினைத்தேன், படிப்பவர்களை துவக்கத்திலேயே நன்றாக கட்டிப்போடுகிறாரே...

அதில் ஒரு வசனம்,

தீர்ப்பு நாளின் அதிபதி ---

(திருக்குர்ஆன் 1:3)

என்ன தீர்ப்பு நாளா?, இவரே மக்களுக்கு கஷ்டத்தை கொடுப்பாராம், இவரே தீர்ப்பு சொல்லுவாராம் என்று கோபப்பட்டேன்... முதல் சூரா என்னை மேற்கொண்டு படிக்க தூண்டியது. அடுத்த அத்தியாயம், சூரத்துல் பகரா...
அதன் இரண்டாது வசனம்,

இது திரு வேதமாகும்; இதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. பயபக்தியுடையோருக்கு நேர்வழி காட்டியாகும். --- Qur'an 2:2
என்ன ஒரு அதிகார தோரணை என்று வியந்தேன்.
நிச்சயமாக இந்த புத்தகத்தை எழுதியவர் அறிவாளிதான். அதுமட்டுமல்லாமல் ஒரு அறிவுசார்ந்த விவாதத்திற்கு தயார்படுத்தின அந்த வசனங்கள்.

படித்துக்கொண்டே வந்தேன். அந்த அத்தியாயத்தின் முப்பதாவது (30) வசனம் ஒரு கனம் என்னை திக்குமுக்காட செய்தது. ஏனென்றால் என் மனதில் நீண்ட நாட்களாக இருந்த கேள்வி அங்கு கேட்கப்பட்டிருந்தது.
ஏன் கடவுள் அநியாயக்கார மனிதனை படைக்க வேண்டும்? என்ற கேள்விதான் அது...

என்னுடைய கேள்வியை இங்கே வானவர்கள் கேட்கின்றனர். இன்னும், உம் இறைவன் வானவர்களை நோக்கி "நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை அமைக்கப் போகிறேன்" என்று கூறியபோது, அவர்கள் "நீ அதில் குழப்பத்தை உண்டாக்கி ரத்தம் சிந்துவோரையா அமைக்கப்போகிறாய்? இன்னும் நாங்களோ

உன் புகழ் ஓதியவர்களாக உன்னை துதித்து, உன் பரிசுத்தத்தைப் போற்றியவர்களாக இருக்கின்றோம்" என்று கூறினார்கள். --- Qur'an 2:30

இந்த ஒரு வசனம் என் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

நான் நாத்திகனாக மாறியதில் இந்த ஒரு கேள்விக்கு நிச்சயம் முக்கிய பங்குண்டு.

வானவர்கள் கேட்பது நியாயம்தானே?. அவர்களோ தவறு செய்யாதவர்கள், இறைவனுக்கு கட்டுப்பட்டவர்கள், அவர்களையே பூமியில் வாழ வைத்திருக்கலாமே? ஏன் இந்த அநியாயக்கார மனிதனை படைக்க வேண்டும்? வானவர்களின் கேள்வி மிக நியாயமானது...இதற்கு என்ன பதில் என்று ஆர்வமுடன் மேற்கொண்டு படித்தேன்.
அதே வசனத்தின் இறுதியில்,

அவன் " நீங்கள் அறியாதவற்றையெல்லாம் நிச்சயமாக நான் அறிவேன்" எனக் கூறினான் --- Qur'an 2:30.

என்ன நீ அறிவாயா? ஏன் பாவம் செய்யக்கூடிய மனிதர்களை படைத்தாய் என்று கேட்டால், அதற்கு அனைத்தையும் நீ அறிவாய் என்பதுதான் பதிலா?

இப்போது குரானுடன் நான் வாக்குவாதம் செய்ய ஆரம்பித்துவிட்டேன் (சிரிக்கிறார்), இந்த குரானை முழுமையாக படித்து என் மற்ற கேள்விகளுக்கும் என்ன பதிலளிக்கிறது என்று பார்த்து விட வேண்டியதுதான் என்று முடிவெடுத்துக் கொண்டேன்.
நாலு பக்கங்கள் மட்டுமே திருப்பலாம் என்றிருந்தவனை இந்த குரான் மென்மேலும் படிக்க தூண்டிக்கொண்டே இருந்தது, என்னுடைய கேள்விகள் ஒவ்வொன்றாய் பதிலளிக்கப்பட்டு கொண்டே வந்தன.

என் அனுபவங்களை முழுமையாக சொல்ல இந்த நேர்க்காணல் நேரம் போதாது. ஆனால் நான் சொல்ல விரும்புவதெல்லாம், குரானை முழுமையாக படித்த பிறகு, தனிப்பட்டமுறையில் என் கேள்விகளுக்கு விடைகள் கிடைத்தன .

குரானின் வசனங்கள் ஆணித்தரமானவை, ஆழ்ந்த கருத்துக்களை கொண்டவை.

பிறகு, என் இருபத்தி எட்டாவது வயதில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டேன்.
ஒருமுறை என் மகள் கேட்டாள்,

“சரி dad, குரான் உங்கள் கேள்விகளுக்கு பதிலளித்து விட்டது. ஆனால், உங்கள் கேள்விகளுக்கெல்லாம் ஒரு புத்தகம் பதிலளித்து விட்டால் மட்டும் இறைவன் இருக்கிறானென்று ஆகிவிடுமா, அல்லது அந்த புத்தகம் இறைவனிடமிருந்து வந்துவிட்டதாக தான் நீங்கள் நினைத்துவிட முடியுமா?”

இது என்னிடம் பலரும் கேட்க நினைக்கக்கூடிய அர்த்தமுள்ள கேள்வி.

நான் குரானை மென்மேலும் படிக்க படிக்க, என் கேள்விகளுக்கு பதில்கள் கிடைக்க துவங்கின. பதில்கள் கிடைக்க கிடைக்க நாத்திகத்தை கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டேன்.

நான் எந்த அளவு குரானை மேற்கொண்டு படித்தேனோ அந்த அளவு நாத்திகத்தை கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டேன்.

நான் கடவுள் இல்லை என்பதில் மிக உறுதியாய் இருந்தவன், யார் எப்படி விளக்கினாலும் கடவுள் இல்லை என்பதில் நின்றவன்.

ஆனால் குரான், அதனைப்பற்றி நிறைய கேள்விகளை எழுப்பிவிட்டது.

அதுமட்டுமல்லாமல், குரானைப் படித்து முடித்ததும் என் மனதில் ஏற்பட்ட அமைதி இருக்கிறதே, இதுநாள் வரை என் வாழ்வில் அனுபவிக்காதது. இறைவனின் அன்பு என்பது இதுதானோ? சில நேரங்களில் அந்த உணர்வு பத்து, பதினைந்து நிமிடங்கள் கூட நிலைத்திருக்கும். என் மனம் அமைதியடைந்தது, ஒரு அற்புதமான உணர்ச்சி அது.

என் வாழ்நாளில் கஷ்டங்களை அதிகம் பார்த்தவன், அந்த அற்புத மன அமைதி எனக்கு பதிலளித்துவிட்டது, இறைவன் இருக்கிறானென்று, இது இறைவேதமென்று.
குரானை ஓதும்போது பலமுறை கண்கலங்கியிருக்கிறேன், அன்பு என்றால் என்னவென்று புரியவைத்தது குரான் தான்.

பலரும் என்னிடம் கேட்பார்கள், "இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதால் உங்கள் வாழ்வில் என்ன திருப்பம் வந்துவிட்டது" என்று.

நான் இப்போது சக மனிதர்களை அதிகம் நேசிக்க ஆரம்பித்திருக்கிறேன். இதுதான் இஸ்லாம் எனக்கு கற்றுகொடுத்த முதல் பாடம்.

தற்போது மனைவி, மூன்று குழந்தைகள் என்று ஒரு நிறைவான வாழ்வை இறைவன் எனக்கு அளித்திருக்கிறான்.
இஸ்லாத்தை ஏற்ற புதிதில், விடியற்காலை தொழுகைக்கும், மாலை நேர தொழுகைகளுக்கும் பள்ளியில் சென்று தொழுது வருவேன். குரான் ஓதப்படுவதை கேட்பது ஒரு மிக அழகான உணர்வு.
ஒருமுறை ஒருவர் என்னிடம் கேட்டார், "டாக்டர் லோங், உங்களுக்கு அரபி புரிகிறதா?" என்று,

நான் சொன்னேன், "ஒரு குழந்தை தன் தாயை எதிர்க்கொள்கிறதே, அதுபோல தான்" என்று...

வாழ்வின் அர்த்தங்களை தேடி கொண்டிருப்போருக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம் ஒன்று தான். நீங்கள் தேடுவதை தொடருங்கள், ஆனால் நேர்மையாய், திறந்த மனதுடன் தேடுங்கள் .

உங்களை என் மார்க்கத்தை ஏற்க சொல்லி கட்டாயப்படுத்தி நான் என் மார்க்கத்தை விற்க விரும்பவில்லை. முஹம்மது (ஸல்) அவர்களுக்கே அந்த உரிமையை இறைவன் வழங்கவில்லை. எடுத்து சொல்வது மட்டும்தான் எங்கள் கடமை, உங்களை நேர்வழியில் செலுத்துவதெல்லாம் இறைவனின் நாட்டம்.
அதனால் தேடுவதை தொடருங்கள்....”

கே எஸ் கிரிஷ்



கோவில்களுக்குப் பெயர் பெற்ற கர்நாடகாவின் உடுப்பியில் உயர்தர இந்து பிராமணக் குருக்கள் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தேன். சிறுவயதிலேயே ஒரு ஆசிரியரின் மூலம் இந்து மத நூல்களைக் கற்கத் தொடங்கியதன் விளைவு,அங்கு நான் பல முரண்பாடுகளைக் கண்டறிந்து கேள்வி கேட்க ஆரம்பித்தேன், ஆனால் திருப்திகரமான பதில்களையோ அல்லது வேதத்தின் அர்த்தத்தையோ பெற முடியவில்லை. வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே அப்படிப்பட்ட ஆரம்பம் இருந்ததால், சரியான மதத்தைப் பற்றிய உண்மையை என்னைத் தேட செய்தது. எனது தொடர்ச்சியான கேள்விகளின் காரணமாக, மதத் தலைவர்களின் ஆலோசனையின் பேரில் எனது பெற்றோர் என்னை ஒரு ஆசிரமத்திற்கு மாற்றினர், ஆசிரமத்தில் சேர்ந்த பிறகு, எனது சந்தேகங்களும் கேள்விகளும் அதிகரித்தன, அதற்கு என் ஆசிரியர்களிடம் முறையான பதில் இல்லை. பதில்களைத் தெரிந்துகொள்ள நூலகத்திலிருந்து புத்தகங்களைப் படிக்குமாறு எனக்கு அறிவுறுத்தப்பட்டது, அதனால் நிறைய இந்து மத நூல்களைப் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. வாழ்க்கையில் திருப்தி இல்லாததாலும், மனதில் எழுந்த சந்தேகங்களுக்கு சரியான பதில் கிடைக்காமலும், நான் ஆசிரமத்தை விட்டு வெளியேறி ஜைன மதம் மற்றும் பிற்கால பௌத்தம் பற்றி கற்க ஆரம்பித்தேன், ஆனால் என் கேள்விகளுக்கு எந்த பதிலும் இல்லை.

சுவாரஸ்யமாக, ஜைனமும் பௌத்தமும் 'அஹிம்சையை ஆதரிக்கின்றன, ஆனால் இருவரும் சிலை வழிபாட்டை அதிகரிப்பதில் காரணமாக உள்ளனர். நான் அவர்களை விட்டுவிட்டு பழமையான மதத்தைத் தேட ஆரம்பித்தேன், ரோமானியர்கள், கிரேக்கர்கள், எகிப்தியர்கள் மற்றும் யூத மதத்தைப் பற்றி அறிந்துகொண்டேன். நான் யூத மதத்தைப் படிக்கும் போது யூதர்களுக்கும் பிராமணர்களுக்கும்

இடையேயான அடிப்படை வேறுபாட்டை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.

நான் ஒரு நாள் என் அலுவலகத்திற்கு பேருந்தில் பயணம் செய்யும் போது , “இலவச குர்ஆன் பிரதிக்கு தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்...” என்ற செய்தியுடன் ஒரு போர்டைக் கண்டேன். பைபிளைப் போல இதுவும் இன்னொரு புத்தகமாக இருக்கலாம் என்ற எண்ணம் தோன்றியது. இருப்பினும், நான் அவர்களை அழைத்து குரானின் நகலைப் பெற முடிவு செய்தேன், இதனால் நான் குரானைப் படித்து தவறுகளைக் கண்டறிந்து முஸ்லிம்களை கேலி செய்ய முடியும். இறுதியாக எனது குர்ஆன் பிரதியைப் பெற, நான் ஒ மாதங்களில் ஓ முறை மையத்திற்கு அழைக்க வேண்டியிருந்தது, ஆனால் மூன்றாவது முறையாக நான் கொஞ்சம் கோபமடைந்தேன், இறுதியாக, குர்ஆன் என்னை அடைந்தது. அல்ஹம்துலில்லாஹ். நான் குர்ஆனைப் படிக்க ஆரம்பித்தேன், அதில் தவறுகளைக் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன், ஆனால் குர்ஆன் எனது எல்லா சந்தேகங்களுக்கும் பதிலளித்துத் தெளிவுபடுத்துவது போல் ஆச்சரியமாக என் கேள்விகளுக்கு ஒவ்வொன்றாக பதில்களைப் பெற ஆரம்பித்தேன். தினமும் குறைந்தது நான்கு பக்கங்களாவது படித்து விரைவாக முடிக்க வேண்டும் என்று முடிவு செய்தாலும், அதில் உள்ள செய்திகள் என் வாழ்க்கையை அதிர்ச்சிக்குள்ளாக்கியதால், என்னால் தினமும் அரை பக்கத்திற்கு மேல் படிக்க முடியவில்லை. நான் படிக்க,படிக்க எனது எல்லா கேள்விகளுக்கும் பதில்களைப் பெற ஆரம்பித்தேன்;

- நான் ஏன் இங்கே இருக்கிறேன்,
- நான் ஏன் படைக்கப்பட்டேன்
- வாழ்க்கையின் நோக்கம் என்ன,

மேலும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால் நான் குர்ஆனையும் என் படைப்பாளரையும் நெருங்கி வந்தேன். குரான் கொடுத்த அண்ணன் போன் செய்து நான் குரான் படிக்கிறேனா என்று கேட்பார். ஒரு நாள் அவருடன் சேர்ந்து தொழுகை நடத்தச் சொன்னார், நான் மறுத்துவிட்டேன். இருப்பினும், இஸ்லாம் பற்றி விவாதிக்க நாங்கள் அடிக்கடி சந்திக்க ஆரம்பித்தோம்.

ஒரு நாள் ஜூஸ் சாப்பிடும் போது என்னிடம் ஒரு கேள்வி கேட்டார்; அதாவது ஜூஸ் முழுவதுமாக குடிக்கும் முன், அவர் இப்போது இறந்துவிட்டால், அவர் ஒரு முஸ்லீம் என்பதால், அவர் அல்லாஹ்வின் கட்டளைகளைப் பின்பற்ற முயற்சித்ததால் சொர்க்கத்தில் நுழையலாம். ஆனால் என் ஜூஸை முடிப்பதற்குள் நான் இறந்துவிட்டால் நான் என்ன செய்வேன், ஏனென்றால், யாருக்கும் ஆயுள் உத்தரவாதம் இல்லை? இந்த கேள்வியால் சிறிது நேரம் அதிர்ச்சியடைந்த நான் ஜூஸ் குடிக்க முடியாமல் எந்த நேரத்திலும் இறந்துவிடுவேன் என உணர்ந்தேன். நான் இன்று இறந்தால் என் பாவங்களை மன்னிக்கப்பட்டு சொர்க்கவாசியாக ஆக்கப்பட வேண்டும் என்று என் வாழ்வில் முதல் முறையாக எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் மனதார வேண்டிக்கொண்டு வீட்டிற்கு சென்றேன்.

நான் காலையில் எழுந்ததும், மேலும் நேரத்தை வீணாக்க வேண்டாம் என்று முடிவு செய்தேன், சகோதரரை அழைத்து நான் இஸ்லாத்தை ஏற்க விரும்புகிறேன் என்று தெரிவித்தேன். உண்மையில் முந்தைய மாலை விவாதத்தின் மூலம், அல்லாஹ் என் இதயத்தை உண்மைக்குத் திறந்தான்.

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வது இந்து மதத்தைப் போலவே ஒரு பெரிய செயலாக இருக்கும் என்று நினைத்தேன். சகோதரர் என்னை இஸ்லாமிய மையத்திற்கு அழைத்தார் மற்றும் இரண்டு நபர்களுக்கு முன்னால், அரபு மற்றும் ஆங்கிலத்தில் “ஷஹாதா” - லா இலாஹா இல்லல்லாஹ் முஹம்மதுர்-ரசூல் அல்லா என்று அறிவிக்கச் சொன்னார். “அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இல்லை என்று

நான் சாட்சி கூறுகிறேன். முஹம்மது நபி அவருடைய தூதர் (ஸல்) அவர்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன் ". நான் ஷஹாதாவை எடுத்துக் கொண்டபோது,× என் மார்பில் இருந்து ஒரு பெரிய உடல் எடை தூக்கியதைப் போன்ற ஒரு அற்புதமான உணர்வை நான் உணர்ந்தேன் என்று அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்கிறேன்; என் வாழ்வில் முதன்முறையாக மூச்சு விடுவது போல் மூச்சுத் திணறினேன். அல்ஹம்துலில்லாஹ், இஸ்லாத்திற்குத் திரும்பியதன் மூலம், உண்மையான மார்க்கத்தைத் தேடும் எனது பயணம் அளவற்ற மகிழ்ச்சி மற்றும் மிகுந்த திருப்தியுடன் முடிந்தது. இப்போது என் பெயர் முஹம்மது இஷாக்

உண்மையான கடவுள் மற்றும் மதத்தை தேடும் அனைவருக்கும் ஒரு பணிவான செய்தியை தெரிவிக்க விரும்புகிறேன். எல்லா மதங்களையும் பற்றி கற்றுக்கொள்வதன் வலியை நீங்கள் எடுக்கும் போது தான் இஸ்லாத்தின் அருமை தெரியும். இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களால் கற்பிக்கப்பட்ட மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட மார்க்கம் இஸ்லாம் என்ற முறையில், சர்வவல்லமையுள்ள ஒரிறைவன் பற்றிய செய்தி, உங்களை மகிழ்ச்சியடையச் செய்யும்.

இஸ்லாம் தான் வாழ்க்கைக்கு ஒரே வழி. அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹ் எனக்கு ஒரு புதிய வாழ்க்கையையும், தூய்மையான ஸ்லேட்டையும் (முந்தைய பாவங்கள் மன்னிக்கப்பட்ட), சொர்க்கத்திற்கான வாய்ப்பையும் அளித்துள்ளான், மேலும் எனது வாழ்நாள் முழுவதையும் இஸ்லாத்தின் செய்தியைப் பரப்புவதற்கும், ஒரு முஸ்லிமாக மரணமடைவதற்கும் நான் பிரார்த்திக்கிறேன்.

ஆமையடி மகேஷ்



ஒரு ஞாயிற்றுக்கிழமை சர்ச்சுக்கு போகும் போது அண்ணன் கேட்டான். எல்லாம் அவன் செயல் என்றால். களவும் கொள்ளையும் கற்பழிப்பும் எவன் செயல் என்று? அண்ணன் கேட்டதை அப்படியே சர்ச் பாதரிடம் கேட்டேன், பதில் ஏதும் சொல்லவில்லை மாறாக என் அண்ணனிடம் சேராதே என்றார். பதில் இல்லாத இடத்தில் எனக்கு என்ன வேலை. ஆம் அதுதான் நான் கடைசியாக சர்ச்க்கு சென்ற ஞாயிறு. இது நடந்த போது எனக்கு வயது 14. அதிலிருந்து நாத்திகனாக அண்ணனோடு சேர்ந்து என் பயணம் தொடங்கி ற்று.
புத்தகங்களை வாசிக்கத் தந்தான். அவன் எனக்கு அப்படி முதல் முதலில் அறிமுகப்படுத்தியது பெரியாரைதான். பெரியாரிலிருந்து என் வாசிப்பை தொடங்கினேன். அவருடைய சிந்தனைகளால் கவரப்பட்டு தொடர்ந்து நண்பர்களிடமும் பள்ளி ஆசிரியர்களிடமும் கடவுள் மறுப்பை பற்றி பேசத்தொடங்கினேன். பெரியாரைத் தொடர்ந்து அம்பேத்காரையும் அறிமுகம் செய்து வைத்தான், அம்பேத்கரை வாசிக்க தொடங்கிய பிறகு அல்லது அவன் மூலம் தினம் அம்பேத்கரை கேட்க தொடங்கிய பிறகு மதங்கள் குறித்த கேள்வியும் கடவுள் குறித்த கேள்வியும் என்னுள் எழ தொடங்கியது.
கடவுள் மறுப்பாளரான அம்பேத்கர் ஏன் பௌத்த மதத்தை ஏற்றார் என்கிற கேள்வி எனக்குள் வந்தபோது என்வயது 17. அம்பேத்கரும் பௌத்தமும் பற்றி அண்ணன் நிறைய சொல்வான்.

அப்படித்தன் ஒருநாள் இசுலாமும் அம்பேத்கரும் என்று அண்ணன் எனக்கு சொல்லத்தொடங்கினான் அன்றுவரை நான் கேள்விப்பட்ட இசுலாத்திற்கும் அண்ணன் சொல்கின்ற இசுலாமுக்கும் தலைகீழ் வித்தியாசம் இருந்தது. அது “சமத்துவம்”. இங்கு நான் இசுலாம் பற்றி மேலும் படிக்க என் பள்ளி தலைமை ஆசிரியர் சனுர்தீன் அவர்களும் ஒரு காரணம் அவருடைய தனிப்பட்ட ஒழுக்கமான வாழ்க்கை

முறை எப்போதும் என்னுள் ஒரு கேள்வியை எழுப்பி கொண்டே இருக்கும் அவருக்கு மட்டும் எப்படி இது சாதித்தியமாகிறது?

எல்லாத்தையும் விட்டுவிட்டு சினிமா வாய்ப்பை தேடி சென்னையில் அலைந்த காலத்தில் என் அறை தோழனாக "சையத்" வந்து சேர்ந்தார், உண்மையை சொல்ல வேண்டுமென்றால் இஸ்லாம் என்கிற உயர்ந்த மார்க்கத்தை மீண்டும் நான் என்னுள் பேச அல்லது வாசிக்க சைய்யதே காரணம். சையது என்னை விட 5 வயது இளையவர். பொய் சொல்ல மாட்டார் உண்மைக்கு புறம்பான எதையும் செய்ய மாட்டார், நங்கள் தங்கிருந்த அந்த சின்ன அறையில் ஐந்து வேளையும் தொழுவார், எப்போதும் அன்பாக இருப்பர், அவர் எதை செய்தாலும் அதில் ஒரு அறம் இருக்கும். அவரின் இந்த நடவடிக்கை எனக்குள் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இது நான் என் தலைமை ஆசிரியாரிடம் பார்த்த பண்பு. இதுவே நான் மறுபடியும் இஸ்லாத்தைப் பற்றி படிக்க தொடக்கமாக இருந்தது.

சினிமாவை விட்டுவிட்டு தேக்கடியில் வேலைக்கு சேர்ந்த போது எனக்கு தம்பியாக கிடைத்தவன்தான் "ஹஸீப்" தொழுகை, நல்லொழுக்கம் எல்லாவற்றிலும் அப்படியே இன்னொரு சையத். மீண்டும் மீண்டும் எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது இந்த இளம் வயதில் இவர்கள் எப்படி இவ்வளவு அறத்தோடு இருக்கிறார்கள் என்பது மட்டும்தான். ஹஸீபின் நட்பு என்னை அவர்கள் வீட்டுக்கு கொண்டு சென்றது அப்போது நான் அங்கு பார்த்தது என்னை மேலும் ஆச்சரியப்பட வைத்தது ஹஸீப் மட்டுமல்ல அவன் குடும்பமே அப்படித்தான் இருக்கிறது.

அறம், ஒழுக்கமும் ஈகை, சமத்துவமும் என்பதன் மேல்தான் இஸ்லாம் கட்டப்பட்டிருக்கிறது என்பதை தெரிந்து கொண்ட பிறகு உறுதியாக முடிவு எடுத்தேன் நான் இவ்வளவு நாளும் தேடிக்கிண்டிருந்த அந்த மார்க்கம் இசுலாம்தான் என்று.
தேக்கடி தம்பி ஹசீபின் வீட்டின் முற்றத்தில் திருக்கலிமா சொல்லி இஸ்லாத்தை ஏற்ற நான் அப்துல் ரப் ஆசாத் "மதுரை அவர்கள்

நடத்தும் சகோதரத்துவ சமூக நீதி பேரவையில் அடிப்படை மார்க்க கல்விகற்று என் புது வாழ்வு அப்துல்லா வாக தொடங்கிற்று.

இஸ்லாமிய உறவுகளுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம் ஒன்றே ஒன்றுதான், வெறும் இரண்டு தம்பிகளின் வாழ்க்கையும் ஒரு குடும்பத்தின் வாழ்க்கையும் என்னை இசுலாத்தை ஏற்றுக்கொள்ள செய்தது என்றால், நபிகள் நாயகத்தின் வாழ்க்கையும் இறைவன் நமக்கு தந்த அருட்கொடை திருக்குரானையும் கடைக்கோடி மக்களுக்கும் கொண்டு சென்றால் இந்த பூமியில் என்ன நடக்கும் என்பதை உங்களுக்கு கேள்வியாகவே விட்டு செல்கிறேன்.

இறைவனை தேடுபவர்களுக்கு நான் கூறுவது குர்ஆனையும் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றையும் படிக்க முற்படுங்கள் உங்கள் கேள்விகளுக்கு விடை கிடைக்கும்.

சிவாஜி ராவ்



என் பெயர் சிவாஜி ராவ், எனது கதையை உங்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். ஒருவேளை, நீங்களும் உண்மையைப் பற்றி சிந்திக்க இது ஒரு வாய்ப்பை ஏற்படுத்தும்.

எனது பின்னணி: நான் நடுத்தர வர்க்க மரபுவழி பிராமண குடும்பத்தில் இருந்து வந்தவன். என் அம்மா ஒரு ஆசிரியர், என் அப்பா டெக்ஸ்டைல் இன்ஜினியராக பணிபுரிகிறார். எனது மதக் கல்வி எனது தாய் மாமாவின் மூலம் வந்தது . அதனால் நான் ஒரு ஆச்சாரமான இந்து ஆனேன். மேலும், எனது முழுக் குடும்பத்தின் பேச்சும் எப்போதும் முஸ்லிம்களுக்கு எதிராகவே இருந்தது, அது என்னுள் ஆழமாகப் பதிந்தது.

நான் சில ஆண்டுகளாக ஆர்எஸ்எஸ் உடன் தொடர்பு கொண்டிருந்தேன்; நான் முஸ்லிம்களை வெறுத்தது எந்த அளவுக்கு எனில், அனைத்து பொது நிகழ்ச்சிகளிலும், அதான் (பாங்கு) ஒலி கேட்கக் கூடாது என்பதற்காக, மியூசிக் சவுண்ட் பாக்ஸ்களுக்கு அதிக சத்தமாக்கி விடுவேன். நான் எனது அன்றாட வழிபாட்டை முடிக்க அனைத்து கோவில்களுக்கும் சென்று வருவது வழக்கம். நான் மரபுவழியாக இருந்ததற்காக என் குடும்பத்தில் விரும்பப்பட்டேன், பாராட்டப்பட்டேன், மேலும் பலவற்றைச் செய்ய ஊக்குவிக்கப்பட்டேன்.

இஸ்லாமுடன் எனது சந்திப்பு

கோடையில், என் அம்மா ஒரு முஸ்லீம் வணிக நிறுவனத்தில் வேலை செய்யும்படி என்னிடம் கேட்டார், நான் அதை மறுத்தேன், ஏனெனில் எனது சிறுவயது முதலே முஸ்லீம்களைப் பற்றிய பின்னணி. இதற்கு என் அம்மா என்னை வற்புறுத்தவில்லை. நான் இந்து ஒருவருடைய நிறுவனத்தில் சில கோடைகாலங்களில் வேலை

செய்தேன், அதனால் என் பெற்றோரை திருப்திப்படுத்த முடிந்தது. பின்னர், அந்த பகுதி நேர வேலையை பிடிக்காமல் விட்டுவிட்டு, சிறந்த வேலையை இலக்காக கொண்டு படிப்பில் அதிக கவனம் செலுத்த ஆரம்பித்தேன். இதற்கிடையில், எனது தாயும் சகோதரிகளும் இந்த முஸ்லிமுக்காக இரண்டு மாதங்கள் பகுதி நேரமாக வேலை செய்தனர். அவர்கள் அவரை மிகவும் கவர்ந்தனர். நான் எப்போதும் வெறுக்கும் ஒரு முஸ்லிமைப் புகழ்வது எனக்குப் பிடிக்காததால், நான் அவரை வெறுத்தேன்.

எந்த வேலையும் செய்யாமல் குடும்பத்திற்குப் பயன் படாததற்காகத் புறந்தள்ளப்பட்டு அவமானப்படுத்தப்பட்டதால், அதே முஸ்லீம் நபரிடம் வேலை செய்யத் தொடங்கினேன். அவருடைய கடையில் ஏறிய பிறகு, அந்த கடையின் முஸ்லிமல்லாத ஊழியர்கள் இஸ்லாத்தைத் தழுவியதால் நான் அவரை அதிகமாக வெறுக்க ஆரம்பித்தேன். எனது மதம் உண்மை என்று அவருக்கு பாடம் கற்பிக்க இந்து வேதங்களை ஒப்பிட்டு பார்க்க ஆரம்பித்தேன். இப்போது, இஸ்லாத்தைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள ஆவலாக இருந்தேன். குரானின் ஆங்கில மொழிபெயர்ப்பைப் படிக்க ஆரம்பித்தேன் (அப்துல்லா யூசுப் அலி எழுதியது). இது எனது முழு மாணவர் வாழ்க்கையையும் மாற்றியது. நான் பயத்திலும் சந்தேகத்திலும் சிக்கிக்கொண்டேன். நான் தற்சமயம் செய்வது, வணங்குவது எல்லாம் தவறு என்ற உண்மையை உணர்ந்தேன். எனது மதம் கற்பனைகள், கட்டுக்கதைகள் மற்றும் பொய்யான கதைகள் பற்றியது. நான் எங்கு செல்கிறேன்?, நான் என்ன செய்ய வேண்டும்?, என் கடமை என்ன?, உண்மையின் செய்தி ஏன் நம் அனைவரையும் சென்றடையவில்லை? போன்ற பல கேள்விகள் என்னிடம் இருந்தன. என் மனதில் பல கேள்விகள் எழுந்தன, எனது முழு மாணவர் வாழ்க்கையும் இந்த உண்மை வேட்டையில் சென்றது. நான் என் பெற்றோரையும் என்னைச் சுற்றியுள்ளவர்களையும் விசாரிக்க ஆரம்பித்தேன்; சர்வவல்லமையுள்ள கடவுளை வர்ணிக்க அல்லது கடவுளின் உருவங்களை உருவாக்குவதை யார் கண்டார்கள்?

என்ற என் கேள்விக்கு "கடவுளை யாரும் பார்த்ததில்லை" என்று அனைவரும் எனக்கு பதிலளித்தனர், இது குர்ஆனில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் உண்மை.

இறுதியாக, சில புராணக் கதைகள் என் நம்பிக்கையை உடைத்தன. விநாயகர், சாமுண்டீஸ்வரி, ராமர், சீதை போன்றவர்களின் கதைகள் எனக்குப் புரியவில்லை. என்னால் அவர்களை தெய்வமாக கற்பனை செய்ய முடியவில்லை. வேதங்கள் சிலை வழிபாட்டுக்கு எதிரானவை என்று நான் என் பெற்றோரிடம், அதை ஏன் இன்னும் கடைப்பிடிக்கிறோம்? என்று கேட்டால் "எங்கள் முன்னோர்கள் செய்வது போலவே நாமும் செய்ய வேண்டும்" என்று அம்மா திட்டினாள்.

அடுத்த நாள், நான் அத்தியாயம் அல் பகராவில் உள்ள குர்ஆனில் ஒரு வசனத்தைப் படித்தேன்:

மேலும், "அல்லாஹ் இறக்கி வைத்த இ(வ்வேதத்)தைப் பின்பற்றுங்கள்" என்று அவர்களிடம் கூறப்பட்டால், அவர்கள் "அப்படியல்ல! எங்களுடைய மூதாதையர்கள் எந்த வழியில் (நடக்கக்) கண்டோமோ, அந்த வழியையே நாங்களும் பின்பற்றுகிறோம்" என்று கூறுகிறார்கள்; என்ன! அவர்களுடைய மூதாதையர்கள், எதையும் விளங்காதவர்களாகவும், நேர்வழிபெறாதவர்களாகவும் இருந்தால் கூடவா? (அல்-பகரா 2:170)

மேலும் எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்:

அந்த சமூகம் சென்றுவிட்டது; அவர்கள் சம்பாதித்தவை அவர்களுக்கே; நீங்கள் சம்பாதித்தவை உங்களுக்கே! அவர்கள் செய்து கொண்டிருந்தது பற்றி நீங்கள் கேட்கப்பட மாட்டீர்கள். (அல்-பகரா 2:134)

இதைப் படித்த நான் நேற்று இரவு அம்மாவிடம் கேட்ட கேள்விக்கான பதில் இருப்பதை பார்த்து அதிர்ச்சியடைந்தேன்.

இந்த வசனம் என்னை ஆழமாகத் தாக்கியது. நான் சிலைகளை வணங்குவதை மெதுவாக நிறுத்தி, பூஜை செய்வதை நிறுத்தினேன், ஏனெனில் ஷிர்க் (பல தெய்வ வழிபாடு) மட்டுமே இறைவனிடம் மன்னிக்கப்படாது. நான் இஸ்லாத்தின் போதனைகளை ரகசியமாக கடைப்பிடிக்க ஆரம்பித்தேன். குர்ஆனில் இருந்து சில மேற்கோள்கள் உள்ளன, அதில் அல்லாஹ் கூறுகிறான்:

இன்றைய தினம், நான் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூரணமாக்கி விட்டேன், உங்கள் மீது எனது அருட்கொடையை நிறைவு செய்து, உங்களுக்காக இஸ்லாத்தை உங்கள் மார்க்கமாக தேர்ந்தெடுத்துள்ளேன் (அல்-மாயிதா 5:3)

என் மனதில் எழும் அனைத்து கேள்விகளுக்கும் குரானில் பதில்கள் இருப்பதை உணர்ந்தேன். அல்லாஹ்வின் அருளால், எனக்கு இருந்த சிறிய அறிவைக் கொண்டு எனது வீட்டில் அல்லாஹ்வின் செய்தியை சொல்ல ஆரம்பித்தேன். நான் எனது பி.இ.யை முடிக்க விரும்பினேன். மேலும் உண்மையை தெரிவிப்பது எனக்கும் எனது குடும்பத்திற்கும் நீண்ட காலத்திற்கு எளிதாக இருக்கும் என்று நினைத்தேன். ஆனாலும், டிப்ளமோ இறுதியாண்டுக்குப் பிறகு, நான் கஷ்டத்தில் தள்ளப்பட்டேன். பின்னர், என் குடும்பத்தை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லாத நேரம் வந்தது. என் சகோதரியும் இஸ்லாத்தை தழுவி என்னுடன் இணைந்தார். என்னுடைய பெயர் தற்போது முஹம்மது உமர் ராவ் நாங்கள் ஒரு வருடத்திற்கும் மேலாக வேலை அல்லது வழக்கமான வருமானம் இல்லாமல் எங்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. அல்ஹம்துலில்லாஹ், சத்தியத்தின் மீது உறுதியாக இருக்க அல்லாஹ் எங்களது வழிகளை எளிதாக்கினான். குர்ஆனில் அல்லாஹ் கூறுவது போல்:

“நாங்கள் ஈமான் (நம்பிக்கை) கொண்டிருக்கின்றோம்” என்று கூறுவதனால் (மட்டும்) அவர்கள் சோதிக்கப்படாமல் விட்டு விடப்படுவார்கள் என்று மனிதர்கள் எண்ணிக் கொண்டார்களா?

அல்லாஹ்வுக்கே புகழனைத்தும், சிறிது நாட்கள் கழித்து, அல்லாஹ் நமக்கான வாய்ப்புகளின் கதவுகளைத் திறந்தான். ஐந்து நேரத் தொழுகையை நிறைவேற்ற முடியாமல் போனதால் எனது முந்தைய வேலையை விட்டுவிட்டேன். அல்லாஹ்வின் அருளால், இப்போது எனக்கு ஒரு சிறந்த வேலை கிடைத்துள்ளது. எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால் அவர் நம்மை சரியான பாதையில் தேர்ந்தெடுத்துள்ளார், அதற்கு மேல் எதுவும் தேவையில்லை.

எனது கதையை நான் இரண்டு சகோதரர்களிடம் விவரித்தேன், அல்ஹம்துலில்லாஹ், எனது முடிவும் தேர்வும் மிகச் சிறந்தது என்று அவர்கள் உறுதியாக நம்பினர். அவர்களும் குர்ஆனைப் படிக்கத் தொடங்கினர், சில நாட்களுக்குப் பிறகு இஸ்லாத்தைத் தழுவினர்.

அல்லாஹ் யாரை நேர்வழியில் செலுத்துகிறானோ அவனை யாரும் வழிகெடுக்க முடியாது.

சிவ சண்முகம்



என் பெயர் சிவ சண்முகம் என்னுடைய பெற்றோர்கள் சிவ பக்தர்களாக இருந்ததால் இந்த பெயர் எனக்கு வைக்கப்பட்டது. நாங்கள் இந்துவில் சத்ரிய வம்சத்தில் நாயக்கர் சமூகத்தை சார்ந்தவர்கள்.

என்னுடைய 23வது வயதில் இஸ்லாம் பற்றிய அறிமுகம் நான் PG படிக்கும்போது என்னுடைய தெருவில் உள்ள நண்பர்களாலேயே கிடைத்தது. எப்படியெனில், நான் மது அருந்தும் பழக்கம் உடையவன், என்னுடன் சேர்ந்து சில நண்பர்களும் அருந்தி வந்த நிலையில் திடீரென அவர்கள் அந்த பழக்கத்தை கைவிட்டு விட்டார்கள். காரணம் வினவியபோது, நாங்களே தப்புபண்ணி கொண்டிருந்தோம். இது ஒரு ஹராமான, அல்லாஹ்வால் (விலக்கப்பட்ட) ஒரு செயல் என்றார்கள்

இந்த உலகமே ஜாலியான ஒரு வாழ்க்கைக்காக உள்ளதுதானே என்ற எதிர்வாதத்துடன், எனக்கு தெரியாது கண்டிப்பாக இந்த பெருநாள் கொண்டாட்டத்துக்கு மது வாங்கிதரனும் என்றேன் முஸ்லிம் நண்பர்களுடன் பிடிவாதமாக!

அதறகவர்கள், இந்த உலகில் மது அருந்தினால் நம்மை படைத்த இறைவன் நம்முடைய மரணததிற்க்கு பின் உள்ள வாழ்வில் 70 மடங்கு அதிக உள்ள உஷ்ணம் கொண்ட தீயினால் உன் உடம்பை பொசுக்கி அதில வழியும் சீழை உனக்கு குடிக்க கொடுபபான். நீ தயாராக இருந்து கொள் என்றனர். இதைக கேட்ட மாத்திரத்தில் என்னை பயம் தொற்றிக் கொண்டது.

இதன் பிறகு இரண்டு நாள் கழித்து என்னிடம் அந்த நண்பர்கள் வந்து குர்ஆனை கொடுத்து, நம் அனைவரையும் படைத்து,

பரிபாலிக்கும இறைவன் ஒருவனே, அவனே அல்லாஹ், அல்லாஹ் என்னும் சொல் ஒரே இறைவனைக் குறிக்கும் அரபிச் சொல்லே தவிர தனிக்கடவுள் அல்ல. மேலும் முஹம்மது நபி அவர்கள் அந்த இறைவன் தேர்ந்தெடுத்த கடைசி இறைத்தூதர் ஆவார் என்ற செய்தியை சொன்னார்கள். நான் அவற்றை முழுமையாக உள் வாங்காமல் சும்மா சரி,சரி என்று தலையை ஆட்டினேன்.

இதன் பிறகு ஒரு வாரம் நண்பர்கள் கண்ணில் படாமல் போக்கு காட்டினேன். அடுத்த முறை சந்திக்கும் பொழுது குர்ஆனில் உள்ள சில வசனங்களை படிக்கச் சொன்னார்கள். குறிப்பாக மது மற்றும் சில படைப்புகளின் அற்புதங்கள்; ஒட்டகத்தைப் பற்றி, தேனீக்களைப் பற்றி, யானைபபடைகளை மென்று துப்பிய வைக்கோல் போல ஆகுமாறு அழித்ததுபற்றி என்று எண்ணற்ற அத்தாட்சிகளை இறைவன் குன்ஆனில் தெளிவாக்கி இருந்தான். இதன் பிறகு தொடர்ச்சியாக குர்ஆனை படித்தும், நண்பர்கள் மூலமாகவும் கேள்வி, பதில் நிகழ்ச்சி மூலமாகவும் நிறைய விஷயங்களை தெரிந்து கொண்டேன், தெளிவும் பெற்றேன்.

படிக்க, படிக்க, நம் அனைவரையும படைத்த இறைவன் ஒருவனே என்றும், இஸ்லாம்தான் இறைவன் அருளிய வழிமுறை என்றும், இறைத்தூதர் முஹம்மது அவர்கள் ஒரு வாழ்வியல் வழிகாட்டி என்பதையும் உணர்ந்த நான் உள்ளூரில் இருந்தால் இஸ்லாத்தை பின்பற்றும் சூழ்நிலை கடினமாக இருக்கும் என்று உணர்ந்ததால் சென்னை வந்து இஸ்லாத்தை ஏற்று தற்சமயம் முஹம்மது சுலைமான் என்று பெயர் மாற்றிக் கொண்டேன்.

இதைப் படிப்பவர்களுக்கு என்னுடைய செய்தி என்னவெனில் உங்கள் உள்ளத்தில் உள்ள அனைத்து கேள்விகளுக்கும் விடை கிடைக்கும் ஒரே நூல் குர்ஆன்தான். ஆகையினால் அதை முதலில் பெற முயற்சி செய்யுங்கள், படியுங்கள், தெளிவு பிறக்கும். இவ்வுலக வாழ்க்கையின் அர்த்தம் புரியும். பூரண மகிழ்ச்சியும் அடைவீர்கள்! இறப்பிற்குப் பின் உள்ள வாழ்வில் சுவர்க்கமும் செல்வீர்கள்.

செந்தில் குமார்



என்னுடைய பழைய பெயர் செந்தில்குமார் எனக்கு எப்படி இஸ்லாம் கிடைத்தது...

என்னோட நண்பர் மூலமாகத்தான் இஸ்லாம் கிடைத்தது என்னுடைய அறை நண்பர் ஒரு கிறிஸ்துவர். ஒருநாள் ஒரு புக் என் கண்ணில் பட்டது. அவர் அந்த புக்கை படித்துவிட்டு ரூம்ல வச்சிருந்தார் என நினைக்கிறேன். எனன நம்ப ரூம்ல புதுசா புக் இருக்கே, என்ன புக்குனு எடுத்து பார்த்தால், ஒரு தெய்வமா? பல தெய்வமா? உடனே படிக்க ஆரம்பிச்சேன். சில பக்கங்களை படித்துவிட்டு வைத்துவிட்டேன். எப்போ எல்லாம் ஃப்ரீயா, நேரம் கிடைக்கும்போதெல்லாம் அந்த புக்கை எடுத்து படிப்பது வழக்கமானது. அந்த அளவுக்கு அதில் தெளிவு இருந்தது. இறைவன் என்றால் யார். அவன் எப்படிப்பட்டவன்? இறைவனுக்கு எப்படி உருவம் கொடுக்க முடியும்? யார் பார்த்தார்கள்? ஒவ்வொன்றும் என்ன சிந்திக்க வைத்தது அதுக்கப்புறம் தான் இஸ்லாம் பற்றிய என்னுடைய தேடல் அதிகமானது.

உங்களுக்கு ஒரு இறைவன், எனக்கு ஒரு இறைவன் இருக்க முடியுமா? எப்படி உங்களை ஒரு இறைவனும், என்னை ஒரு இறைவனும் படைத்திருக்க முடியும்? நாம் வாழும் பூமி ஒன்று, மேலே இருக்கிற வானம் ஒன்று, ஆனா இவைகளையும் இதை போன்றவைகளையும் படைத்த இறைவன் மட்டும் எப்படி வெவ்வேறான இறைவனாக இருக்க முடியும்?

அதைக் கீழ்க்கானும் குர்ஆன் வசனங்கள் என்னை மேலும் தெளிவு படுத்தியது

நபியே! நீர் அவர்களை நோக்கி வானத்தில் இருந்தும் பூமியிலிருந்தும் உங்களுக்கு ஆகாரம் அளிப்பவன் யார் ?

உங்களுடைய பார்வைக்கு கேள்விக்கும் உரிமையாளன் யார்? இறந்தவற்றில் இருந்து உயிர் உள்ளவற்றையும் உயிருள்ளவற்றிலிருந்து இறந்தவற்றையும் வெளிப்படுத்துபவன் யார்? உலகில் எல்லா காரியங்களையும் திட்டமிட்டு நிகழ்த்துபவன் யார்? என்று கேட்பீரானால் அதற்கு அவர்கள் அல்லாஹ்(இறைவன்) தான் என்று கூறுவார்கள். அவ்வாறாயின் நீங்கள் அவனுக்கு பயந்து வழிபட வேண்டாமா? என்று நபியே நீர் கேளும்...

அல்குர்ஆன்(10:31)

இது போன்ற நிறைய வசனங்கள் என்னை சிந்திக்க வைத்தது..

இஸ்லாம் தான் சரியான மார்க்கமாக இருக்க முடியும் அதைப் பின்பற்றினால் மட்டுமே சொர்க்கம் போக முடியும் என்று விளங்கிக் கொண்டேன் அதற்கு அப்புறம் அந்தப் புத்தகத்தின் பின்னால் ஒரு தோழரின் போன் நம்பர் கொடுக்கப்பட்டிருந்தது அவரை தொடர்பு கொண்டு நான் இஸ்லாத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டேன் ..என்னுடைய தற்போதைய பெயர் அப்துல் ரஹீம். அல்ஹம்துலில்லாஹ்

நீங்களும் உண்மை இறைத்தேடலில் இருப்பவராயின், கலைமாமணி அப்துல்லாஹ் அடியார் எழுதிய ஒரு தெய்வமா? பல தெய்வமா? என்ற புத்தகம் உங்களுக்கு பாதையை எளிதாக்கும், மேற்கொண்டு குர்ஆன் உங்கள் தேடலை முழுமைபடுத்திவிடும். முன்னுரிமை கொடுத்து இக்காரியத்தை செய்யுங்கள், இவ்வுலக வாழ்வின் அருமை புரியும். தெளிவு பிறக்கும்.

குறிப்பு : ஒரு தெய்வமா? பல தெய்வமா? புத்தகத்தின் QR Code கடைசி அட்டையில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஹெலினா



என் பெயர் ஹெலினா பிரிஜிட், இதோ என் கதை. உலகம் முழுவதும் நடந்த தீவிரவாத தாக்குதல்களுக்குப் பிறகு இஸ்லாமிய பயங்கரவாதம் பற்றி செய்திகளில் வெளிவரத் தொடங்கின. "இது இஸ்லாத்தின் தவறு" என்றார்கள். "யார் இஸ்லாம்?" என்று எனக்குள் நினைத்துக்கொண்டேன். ஆம், "யார்?". எனக்கு இஸ்லாம் மதத்தைப் பற்றி, ஏன்?, கிறித்துவம் பற்றிக் கூட எந்த அறிவும் இல்லை. எனக்கு ஒரு ஒன்றுவிட்ட சகோதரர் இருக்கிறார், அவர் குடும்பத்தில் யூதர்கள் உள்ளனர், என் தாயின் தரப்பு கிறிஸ்தவர்கள் / நாத்திகர்கள் மற்றும் என் தந்தையின் தரப்பும் கிறிஸ்தவர்கள்/நாத்திகர்கள். என் பெற்றோர் எங்களுக்கு மதத்தைப் பற்றி கற்பிப்பதையோ அல்லது மத ரீதியாக எங்களை வளர விடுவதையோ பார்க்கவில்லை. இருந்தாலும், என் அம்மா என் இளைய சகோதரர் தீனுக்கு பைபிளிலிருந்து வாசித்துக் காட்டினார். இது வேடிக்கையானது, ஏனென்றால் எனக்கு நான்கு சகோதரர்கள் உள்ளனர், அதில் மூவருக்கு அரபு பெயர்கள் உள்ளன!

இஸ்லாத்தை வெறுப்பது

அதனால் நான் இஸ்லாத்தை வெறுக்க ஆரம்பித்தேன், ஏனென்றால் இந்த கொடூரமான முஸ்லிம்கள் எந்த காரணமும் இல்லாமல் அப்பாவி மக்களை அங்கும் இங்கும் கொன்றுவிடுகிறார்கள். அந்த நேரத்தில் எனது தோழியை நான் இதில் இழுத்தேன், அவளும் இஸ்லாத்தை வெகு விரைவில் வெறுத்தாள். நாங்கள் ஒருவரையொருவர் ஸ்னாப்சாட் செய்து, எங்களைப் பற்றிய படங்களுடன், சில நீண்ட கருப்பு தாடிகள் மற்றும் மோனோ-புருவங்களை வரைந்தோம், நாங்கள் நிகாப்/ஹிஜாப் அணிந்து, தலைக்கவசத்தை கேலி செய்யும் இன்ஸ்டாகிராம் கணக்குகளை கூட உருவாக்கினோம். அவளுடைய பெயரை ஒத்ததாக இருந்ததால் நான் அவளை யூசுப் என்று அழைத்தேன்,

அவள் என்னை ஹபீபா என்று அழைத்தாள், அது என் பெயரைப் போலவே இருந்தது. நாங்கள் கணவன்-மனைவியாக நடித்தோம், பொது இடங்களில் நான் அதிகமாக தோலை (என் உடலை) க்காட்டினால் யூசுப் என்னை எப்படி துஷ்பிரயோகம் செய்வார் என்று கேலி செய்தோம். நாங்கள் "அல்லாஹு அக்பர்!" என்று தெருக்களில் ஒருவரையொருவர், அனைவரும் கேட்பதற்காக சத்தம் போட்டோம்., அது எதிர்மறையான விஷயமாக கூட இல்லை, ஆனால் எங்களுக்கு அது வேடிக்கையாக இருந்தது. நான் சொல்ல வருவது புரியும் என்று நினைக்கிறேன். நானும் அவளும் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்கள் மீது மிகவும் அவமரியாதையாக இருந்தோம்,

உண்மை என்னவெனில் நாங்கள் ஒரு முஸ்லிமைக் கூட சரியாகப் பார்த்ததில்லை அல்லது சந்திக்கவில்லை என்றாலும், நான் இஸ்லாத்தை அவமரியாதை செய்துகொண்டே ஆன்லைனில் இஸ்லாமைப் பற்றி பார்க்க ஆரம்பித்தேன். நான் "அல்லாஹும்ம லெப்பைக்" (வந்துவிட்டேன் இறைவா") என்று அழைக்கப்படும் ஒரு வீடியோவைக் கண்டேன், அது முற்றிலும் என்னை கவர்ந்தது. பிறகு இன்னொரு இஸ்லாமிய வீடியோவைக் கேட்டேன். மற்றொன்று, மற்றொன்று என்று ஆர்வம் கூடிக் கொண்டே போனது. பின்னர் நான் உண்மையில் இஸ்லாம் மதத்தைப் பற்றி படிக்க ஆரம்பித்தேன். "கடவுள் ஒருவரே, முஹம்மது (ஸல்) கடைசி தூதர், மக்காவை நோக்கி ஒரு நாளைக்கு ஐந்து முறை தொழுகை செய்வது, நோன்பு ..." முதலில் இது மிகவும் சுவாரஸ்யமாகத் தோன்றவில்லை, ஆனால் இஸ்லாம் நோக்கிய எனது பாதையின் ஆரம்பம் இதுதான் என்று எனக்கு அப்பொழுது தெரியவில்லை. நாளடைவில், மதத்தைப் பற்றி இவ்வளவு படித்து, தெளிந்த பிறகு, அதைத் துன்புறுத்துவதில் நான் சோர்வடைந்தேன். ரகசியமாக, நான் மெதுவாக இஸ்லாத்தின் மீது காதல் கொண்டேன், ஆனால் நான் அதை யாரிடமும் சொல்ல முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக, எனக்கு 15 வயதுதான் அப்பொழுது. நான் அந்த நேரத்தில் என் தோழியுடன் கருத்து சண்டையிட (உடலால் அல்ல) திட்டமிட்டேன், ஏனென்றால் நான்

அவளை சந்தித்ததிலிருந்து அவள் என் மீது மோசமான செல்வாக்கு செலுத்தினாள், அதனால் நான் அவளை அகற்ற விரும்பினேன். என் திட்டம் சரியாக வேலை செய்தது, அவள் என் மீது கோபமடைந்தாள் - நான் விரும்பியதைப் போலவே. அவள் என்னைவிட்டு பிரிந்தாள்.

நான் வேறொரு ஊருக்குச் சென்றேன், ஒரு நபர் கூட தெரியாத ஒரு புதிய பள்ளியில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தேன், வீட்டை விட்டு வெளியேறினேன்.

ஒரு முஸ்லீம் மாணவியுடன் சந்திப்பு.

எனது உயர்நிலைப் பள்ளியின் முதல் நாளில், வகுப்புப் பட்டியலில் எனது பெயரைப் பார்த்தேன், நான் இருக்க வேண்டிய அறைக்குச் சென்று எனது வகுப்பையும் ஆசிரியரையும் சந்தித்தேன். நான் உள்ளே சென்றேன், உள்ளே ஹிஜாப் அணிந்த ஒரு முஸ்லிம் மாணவியை பார்த்தேன். அவள் மிகவும் அழகாகவும் சிறியவளாகவும் இருந்தாள், பேஸ்புக் மற்றும் எண்களை உடனடியாக பரிமாறிக்கொண்டோம். அப்படித்தான் அவளை நான் தெரிந்து கொண்டேன். நான் அவள் சொல்வதைக் கவனித்தேன், எப்போதும் அவள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தேன், ஓய்வு நேரத்தில் அவளைச் சந்தித்து அவள் வீட்டில் தூங்கினேன். மெதுவாக நான் அவளிடம் இஸ்லாம் பற்றிய கேள்விகளைக் கேட்டேன்: நீங்கள் ஏன் ஹிஜாப் அணிகிறீர்கள்? நீங்கள் ஏன் பிரார்த்தனை செய்கிறீர்கள்? சாப்பிடுவதற்கு முன் பிஸ்மில்லாஹ் சொல்ல வேண்டுமா? நான் குரானை பார்க்கலாமா?... நான் ஆர்வமாக இருந்ததை அவள் சீரியஸாக எடுத்துக்கொள்வாள் என்று நினைத்தேன், ஆனால் அவள் என்னிடம் பெரிதாக ஒன்றும் கேட்கவில்லை, அதனால் அவளுக்கு இது சாதாரணமானது என்று நான் நினைத்தேன், ஒரு வருடம் சென்றது, அதே பள்ளியில் எங்கள் முதல் மற்றும் ஒரே ஆண்டு ஒன்றாக முடிந்தது.

அந்த வாரத்திற்குப் பிறகு, ஒரு ஞாயிற்றுக்கிழமை, அறிந்த எனது இஸ்லாமிய நண்பரை அழைத்தேன். இன்று சந்திப்பது முற்றிலும் அவசியம் என்று அவளிடம் கூறினேன். அவள் வசித்த இடத்திலிருந்து பேருந்தில் வந்து என்னை மாலில் சந்தித்தாள். அருகில் ஒரு ஆற்றுக்கு நடந்தோம். அது அழகாக இருந்தது. வானிலை நன்றாக இருந்தது, அது கூடாக இருந்தது, வெளியே மக்கள் நடந்து கொண்டிருந்தனர், அது சரியான தருணமாக இருந்தது. எனது தொலைபேசியில் எனது குறிப்புகளில் குர்ஆனில் இருந்து ஒரு வசனத்தை எழுதி வைத்திருந்தேன். அதில் "இஸ்லாம் மதத்தில் எந்த நிர்ப்பந்தமும் இல்லை" என்று எழுதப்பட்டிருந்தது. நான் அவளிடம் என்ன சொல்லப் போகிறேன் என்று நான் மிகவும் பதட்டமாக இருந்தேன், என்னால் அதைச் செய்ய முடியவில்லை, என் தொலைபேசி எனக்காக அதைச் செய்ய வேண்டியிருந்தது. அதனால் நான் அவளிடம் இந்த வசனத்தைக் காட்டி, "நான் உன்னிடம் என்ன சொல்ல விரும்புகிறேன் என்று உனக்குத் தெரியுதா?"என்று கேட்டேன். அவள் உடனே "இல்லை" என்று சொன்னாள், நான் அவளை ஒருமுறைக்கு இருமுறை யோசிக்கச் சொன்னேன். "நீங்கள் ஒரு முஸ்லிமாக மாற விரும்புகிறீர்களா?" என்று அவள் கூறுவதற்கு இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் எடுத்ததாக நான் நினைக்கிறேன். நான் நன்றாக சிரித்தேன், தலையை ஆட்டினேன், "ஆம்" என்றேன். நான் அழ ஆரம்பித்ததும் என் கண்களை மறைக்க என் இரண்டு கைகளையும் மேலே கொண்டு வந்தேன். அவளும் அழ ஆரம்பித்தாள்.

நாங்கள் இருவரும் எங்கள் ஆட்காட்டி விரல்களை உயர்த்தியவாறே அவள் சொல்லிக் கொடுக்க நான் அவளுக்குப் பிறகு மீண்டும் சொன்னேன்.

"அஷ் ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹ், வ அஷ் ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ ரஸூலுஹு".

(வணக்கத்திற்குரிய உரியவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறில்லை. முஹம்மது நபி அவர்கள் அல்லாஹ்வின் தூதரும், அடியாரும் ஆவார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன்)

இன்றுவரை நாங்கள் நல்ல நண்பர்களாக இருக்கிறோம், நாங்கள் நகரத்தின் நடுவில் ஒரு பெஞ்சில் அமர்ந்திருந்தபோது என்னால் மறக்க முடியாத ஒன்று, அவள் சொன்னாள்:

"நாங்கள் ஒன்றாக சொர்க்கத்துக்குச் செல்வோம் என்று."

2017 ஆம் ஆண்டு அக்டோபர் 23 ஆம் தேதி எனது பெயரை சஃபியா என்று மாற்றினேன். எனது 17வது பிறந்தநாளுக்கு மூன்று வாரங்களுக்குப் பிறகு நான் இஸ்லாத்திற்கு மாறினேன், அதாவது 2016 ஆகஸ்ட் 28 அன்று. இரண்டு வருடங்கள் கூட ஆகவில்லை,ஆனால் நான் நிறைய கற்றுக்கொண்டேன். நான் இப்போது கல்யாணம் செய்து கொண்டேன். அல்ஹம்துலில்லாஹ்.

எனவே, நீங்கள் சத்தியத்தை (கடவுள்/மதம்) தேடுகிறீர்களானால், உங்களின் அனைத்து வினவல்கள்/கேள்விகளையும் எழுதிக் கொள்ளுங்கள், நீங்கள் எந்த ஒரு கற்றறிந்த முஸ்லிமிடமும் கேளுங்கள் அல்லது குர்ஆனைப் படிக்கத் தொடங்குங்கள். நீங்கள் நிச்சயமாக அதை கண்டுபிடிப்பீர்கள். உண்மையை உணர்ந்து கொள்வீர்கள்.

வாசுகி



அன்பளிப்பாக சென்ற குர்ஆன் ஒரு வீட்டில் ஏற்படுத்திய மாற்றம்

சமையல் வேலையை முடித்து விட்டு சோில் வந்து அமர்ந்த வாசுகி அருகிலிருந்த தடிமனான ஒரு புக்கை எடுத்து புரட்டுகிறார். படிக்கும் பொழுது சில விஷயங்கள் புரிகிறது சில விஷயங்கள் புரியவில்லை அதை மூடி வைக்கிறார். பின்பு சிறிது நேரம் கழித்து மீண்டும் அதை திறக்கிறார் முன்பு நடந்தது போலவே இப்பொழுதும் நடக்கிறது இதேபோல் நாட்கள் கடக்கின்றன சில மாதங்கள் கடக்கின்றன அதற்குப்பின் அவருக்கு கீழ்க்கண்ட விஷயங்கள் மனதிற்கு தெளிவாக புரிகிறது.

1. நாம் வணங்கி கொண்டிருப்பவைகள் உண்மையான தெய்வம் அல்ல.

2. நாம் தவறில் இருக்கிறோம்.

3. நாம் வணங்க வேண்டியது நம் அனைவரையும் படைத்த அந்த ஒரு இறைவனையே என்றும்

4. அவன் கட்டளையிட்ட ஏவல், விலக்கல்களையே பின்பற்றி நடக்க வேண்டும் என்றும்

5. நாம் இறந்த பிறகு ஒரு வாழ்க்கை இருக்கிறது அதில் சொர்க்கம் நரகம் இருக்கிறது. இறைவனின் கட்டளையை பின்பற்றினால் மட்டுமே சொர்க்கம் செல்ல முடியும் என்பதையும், நம் வாழ்க்கையை தற்சமய நிலையில் கழித்தால் நரகம் செல்ல நேரிடும் என்றும் அவர் உணர்கிறார்.

உணர்ந்த அந்த பெண்மணிக்கு வயது 30க்கு மேல், ஒரு குழந்தை உள்ளது.

அவர் வீட்டில் நடந்தது இதுதான்.

எங்கிருந்தோ பெறப்பட்ட அன்பளிப்பு குர்ஆன் அவர் கணவர் மூலம் அந்த வீட்டுக்கு வருகிறது கொண்டு வந்த கணவர் எல்லோரையும் போல் அதை டேபிள் மேல் வைத்துவிடுகிறார். மறுநாள் கணவர் அலுவலகத்திற்கும், குழந்தை ஸ்கூலுக்கும் சென்ற பின், தன்னுடைய சமையல் வேலையை முடித்து விட்டு, மேஜை மீது வைக்கப்பட்ட குர்ஆனை அந்தப் பெண்மணி தற்செயலாக எடுத்து புரட்டுகிறார். தொடர்ச்சியாக தினந்தோறும் குர்ஆனை பார்த்துவந்த பெண் கடைசியில் இஸ்லாத்தைத் தழுவ நினைக்கிறார். ஆனால் அன்பளிப்பாக வாங்கிக்கொண்டு வந்த கணவரோ அதை படிக்கவே இல்லை. உண்மையை தெளிவர உணர்ந்த பெண்மணியோ உடனே தான் இஸ்லாத்தை ஏற்க வேண்டும் என்று கணவரிடம் கூறுகிறார் ஒன்றுமே படிக்காத காரணத்தினால் அவரால் அதை விளங்க முடியவில்லை. ஆனாலும் தான் படித்த கொள்கை, தான் படித்த கருத்து உண்மை என்று உணர்ந்த அந்த பெண்மணி விடாப்பிடியாக அவருடைய குழந்தையுடன் இஸ்லாத்தை தழுவுகிறார். பின்பு அவருடைய வாழ்க்கை பல நல்ல மாற்றங்களுடன் ஓரிறைக் கொள்கையில் உறுதியாக தொடர்கிறது.

இறைவனுடைய வேதத்தை மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பது நம் கடமை. மீதி வேலையை குர்ஆன் செய்து கொள்ளும் (படைத்தவனின் நாட்டப்படி)

மாற்றங்களை எவ்விதத்திலும் சாத்தியப்படுத்துவது இறைவனே என்பதற்குக் மேற்கண்ட நிகழ்வே ஒரு சாட்சி!

உண்மையை தேடுவதும், உணர்வதும், உணர வைப்பதும், உணர்ந்தவர்களின் பணி, கடமை,

நீங்கள் அதற்கான முயற்சியை, வாய்ப்பை செய்கிறீர்களா என்பதே கேள்வி?

உண்மையை உணர விரும்புபவர்கள் குர்ஆனை ஒரு முறையேனும் படியுங்கள்.

உங்களில் ஒரு சகோதரி, தற்போது ஆயிஷா வாக.

கண்ணன்



இறைவனை தேடிய எனது பயணம்

கோயில், பூஜை, திருவிளக்கு என்று அன்றாடம் இறை நம்பிக்கையில் ஊறிய ஏழு பேர் கொண்ட குடும்பத்தார்களாகிய நாங்கள், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் காயல்பட்டினத்தை சார்ந்தவர்கள்.

இராமாயணம், மகாபாரதம் போன்ற தொடர்களை பயபக்தியுடன் பார்க்கும் கண்ணன் எனும் நான் தினமும் பிள்ளையார் கோயில் போய் வணங்கும் பழக்கம் உள்ளவன். இவ்வளவு பக்தி சிரத்தையுடன் நான் இருந்தாலும் என் எண்ண ஓட்டத்தில் நாம் வணங்கும் இதெல்லாம் ஏதோ ஒரு பெரும் பாராங்கல்லில் செய்த சிலைதானே, கல்தானே என்ற நினைப்பே அடிக்கடி வந்து போய் இருந்தது.

இருந்தாலும் நமக்கு வருகின்ற இம்மாதிரி நினைப்பு நம்மைவிட நிறைய படித்த அறிஞர்களுக்கும் வரத்தானே செய்யும். அவர்களே எதோ ஒன்றிற்கு பயன்படக்கூடிய கல்லை சிலையாக வடித்ததை வணங்கும் போது நாம் ஏன் அதைப்பற்றி அலட்டிக் கொள்ள வேண்டும் என்று என் மனதை தேற்றிக் கொண்டேன்.

இதற்கிடையில் நான் அதிகமாக நேசித்து வணங்கும் பிள்ளையாரிடம் முன் வைக்கும் என்னுடைய பிரார்த்தனை/வேண்டுதல் எதுவுமே நடப்பதில்லை, நாட்களாக, மாதங்களாக வழிபட்டும் ஒரு சிறு வேண்டுதலும் நடக்காத காரணத்தால் என் அம்மாவிடம் சென்று முறையிட்டேன்.

உடனே அம்மா, இனி நீ முருகனை கும்பிடு, அவர் இவரை (பிள்ளையாரை) விட பவர்ஃபுல் என்று சொல்ல, வணக்கம் முருகனை நோக்கி திரும்புகிறது. அவரிடமும் வைத்த

கோரிக்கைகள்/வேண்டுதல்கள் எதுவும் நடக்காததால், அம்மாவின் அறிவுரைப்படி "நாராயணனை" வழிபட ஆரம்பிக்கிறேன். நாராயணனிடமும் எந்த ரிசல்ட்டும் கிடைக்காததால், ஐயப்பனுக்கு மாலை போட்டு விரதம் இருந்து சபரிமலை செல்ல அம்மாவால் கட்டளையிடப்படுகிறேன். அங்கும் திருப்தி கிடைக்காததினால் ஒரு பயம் வந்தது. ஒருத்தரை விட்டுட்டு அடுத்தவரை வணங்குவதால் முன்னவர் கொடுக்கவிடாமல் தடுக்கிறாரோ என்ற எண்ணம் எழ, எதுக்கு வம்பு எண எல்லாவற்றையும் சேர்த்து கும்பிட ஆரம்பிக்கிறேன். அப்படியும் எதுவும் நடப்பதாக இல்லை.

இதற்க்கு நடுவே எங்க வீட்டில் ஒரு ரூம் முழுவதும் பல வகை வகையான சாமிகளின் போட்டோவாகவே இருக்கும். எனக்கு ஏற்பட்ட விரக்தி போல் என் அம்மாவுக்கும் அதையெல்லாம் பக்தி சிரத்தையுடன் வணங்கியும் எந்த பிரார்த்தனையும் கைகூடாததால் என்னை அழைத்து எல்லா போட்டோக் களையும் கழற்றி சாக்கு மூட்டையில் கட்டி கொண்டு போய் கடலில் போடச் சொன்னார்கள். போட்டுவிட்டேன். ஒருமுறை இருமுறை அல்ல மூன்றுமுறை சிற்சில இடைவெளிகளில் இவ்வாறு நிகழ்ந்தது.

இந்நிலையில் சில நிர்ப்பந்தத்தின் காரணமாக எங்க ஊர்க்காரர் வேலூரில் வைத்திருந்த லெதர் எக்ஸபோர்ட் கம்பெனியில் வேலைக்கு நாங்க மொத்த குடும்பமும் வருகிறோம்.

அந்த நிறுவனத்தின் முஸ்லிம் முதலாளி வாரம் மூன்று நாள் பேக்டரிக்கு வருவார் அவர் வந்தால் அதிகாலையில் தொழுகைக்கு 5 மணிக்கு எழுந்து செல்வார். முதலாளி காலையிலேயே எழுவதால் வேலை செய்வோர் எல்லோரும் விதிவிலக்கின்றி எழுநது விடுவார்கள். நானும் எழுந்துவிடுவேன். அப்படி ஒரு நாளில் அவர் தொழுகை முடிந்ததும் சென்றுவிட்டார். அப்போது நான் அவர்கள் தொழுத இடத்திற்குக் சென்று அங்கு இருந்த ஒரு குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்பை எடுத்து தற்செயலாக பிரிக்க, வந்த பக்கத்தை படித்தால் கீழ்க்கண்ட வசனங்கள் கண்ணில் படுகிறது.

குர்ஆன் 21 : 52- 67

அவர் (இப்ராஹீம்) தம் தந்தையிடமும், தம் சமூகத்தாரிடமும் "நீங்கள் வழிபடும் இந்த உருவங்கள் என்ன?" என்று கேட்ட போது

அவர்கள், "எங்கள் மூதாதையவர்கள் இவற்றை வணங்கிக் கொண்டிருந்ததை நாங்கள் கண்டோம் என்று கூறினார்கள்.

(அதற்கு) அவர், "நிச்சயமாக நீங்களும், உங்களுடைய மூதாதையரும் - பகிரங்கமான வழி கேட்டில் தான் இருந்து வருகிறீர்கள்" என்று கூறினார்.

(அதற்கு) அவர்கள் "நீர் எங்களிடம் உண்மையைக் கொண்டு வந்திருக்கிறீரா? அல்லது விளையாடுபவர்களில் ஒருவராக இருக்கின்றீரா?" என்று கேட்டார்கள்.

"அப்படியல்ல. உங்களுடைய இறைவன் வானங்களுக்கும் பூமிக்கும் இறைவனாவான். அவனே அவற்றைப் படைத்தவன்; இதற்குச் சாட்சியம் கூறுபவர்களில் நானும் ஒருவனாக இருக்கின்றேன்" என்று (இப்ராஹீம்) கூறினார்.

"இன்னும் நீங்கள் திரும்பிச் சென்ற பின்னர், அல்லாஹ்வின் மீது சத்தியமாக உங்கள் சிலைகளுக்கு ஒரு சதி செய்வேன்!" (என்றும் கூறினார்.)

அவ்வாறே அவர், அவற்றில் பெரிய (சிலையை)தைத் தவிர (மற்ற) எல்லாவற்றையும் துண்டு துண்டாக்கினார்; அவர்கள் அதன்பால் திரும்புவதற்காக (அதை விட்டு விட்டார்).

"எங்கள் தெய்வங்களுக்கு இவ்வாறு (தீங்கு) செய்தது யார்? நிச்சயமாக அவன் அக்கிரமக்காரர்களில் ஒருவனாக இருப்பான்" என்று கூறினார்கள்.

அதற்கு (அவர்களில் சிலர்) "இளைஞர் ஒருவர் இவற்றைப் பற்றி

(அவதூறாகக்) குறிப்பிட்டுவந்ததைநாங்கள்கேள்விப்பட்டிருக்கிறோம், அவருக்கு இப்ராஹீம் என்று பெயர் சொல்லப்படுகிறது" என்று கூறினார்கள்.

"அப்படியானால் அவரை மக்கள் கண் முன்னே கொண்டு வாருங்கள்; அவர்கள் சாட்சியம் கூறும் பொருட்டு" என்று சொன்னார்கள்.

"இப்ராஹீமே! எங்கள் தெய்வங்களை இவ்வாறு செய்தவர் நீர் தாமோ?" என்று (அவர் வந்ததும்) கேட்டனர்.

அதற்கு அவர் "அப்படியல்ல! இவற்றில் பெரிய சிலை இதோ இருக்கிறதே, இது தான் செய்திருக்கும்; எனவே, இவை பேசக்கூடியவையாக இருப்பின், இவற்றையே நீங்கள் கேளுங்கள்"என்று கூறினார்.

(இதற்கு பதில் கூறத் தெரியாத) அவர்கள் தங்களுக்குள் திரும்பி, (ஒருவருக்கொருவர்) "நிச்சயமாக நீங்கள் தாம் (இவற்றை தெய்வங்களாக நம்பி) அநியாயம் செய்து விட்டீர்கள்" என்று பேசிக் கொண்டார்கள்.

பிறகு அவர்கள் (அவமானத்துடன்) தங்கள் தலைகளைத் தொங்கப் போட்டுக் கொள்ளுமாறு செய்யப்பட்டார்கள்; "இவை பேச மாட்டா என்பதைத் தான் நீர் நிச்சயமாக அறிவீரே!" (என்று கூறினர்).

"(அப்படியாயின்) அல்லாஹ்வையன்றி உங்களுக்கு எந்த நன்மையும் செய்யாத உங்களுக்கு தீங்கும் அளிக்காதவற்றையா வணங்குகிறீர்கள்" என்று கேட்டார்.

"சீச்சீ! உங்களுக்கும், நீங்கள் வணங்கும் அல்லாஹ் அல்லாதவற்றுக்கும் கேடு தான்; நீங்கள் இதனை அறிந்து கொள்ளவில்லையா?" (என்று இப்ராஹீம் கூறினார்).

மேற்கண்ட குர்ஆன் வசனங்கள் எனக்காக, என்னுடைய

நெடுநாள் விரக்திக்கும், கேள்விகளுக்கும் நேரடியான பதிலளிப்பதாகவே அமைந்திருந்தது கண்டு மனம் சந்தோஷம் அடைந்தது. (இதில் கூறப்பட்டுள்ள இப்ராஹீம் என்பவர் ஒரு இறைத் தூதராகவும், அவர் வாழ்ந்த காலம் சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன் என்றும் பின்னாளில் தெரிந்து கொண்டேன்) இந்த வசனங்களின் மூலம் நாம் வணங்கி வந்த சிலைகள் கடவுள்கள் அல்ல என்பது தெளிவாகிவிட்டது. இதை இவ்வளவு தெளிவாக எடுத்துரைக்கும் இந்த குர்ஆன் , யார் உண்மையான கடவுள்? என்பதையும் சொல்லுமே என்று ஆராய்ந்தால் அதற்க்கும் தெள்ளத்தெளிவாக கீழ்க்கண்ட வசனம் தெளிவுபடுத்தியது.

குர்ஆன் 112 : 1-4

(நபியே?!) நீர் கூறுவீராகடு அல்லாஹ்; அவன் ஒருவனே.

அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன்.

அவன் (எவரையும்) பெறவுமில்லை; (எவராலும்) பெறப்படவுமில்லை.

அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை.

மேலும்

குர்ஆன் 2 : 255

அல்லாஹ்-அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் வேறு இல்லை; அவன் என்றென்றும் ஜீவித்திருப்பவன்; என்றென்றும் நிலைத்திருப்பவன்; அவனை அரி துயிலோ, உறக்கமோ பீடிக்கா; வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அவனுக்கே உரியன; அவன் அனுமதியின்றி அவனிடம் யார் பரிந்துரை செய்ய முடியும்? (படைப்பினங்களுக்கு) முன்னருள்ளவற்றையும், அவற்றுக்குப் பின்னருள்ளவற்றையும் அவன் நன்கறிவான்; அவன் ஞானத்திலிருந்து எதனையும், அவன் நாட்டமின்றி, எவரும்

அறிந்துகொள்ள முடியாது; அவனுடைய அரியாசனம் (குர்ஸிய்யு) வானங்களிலும், பூமியிலும் பரந்து நிற்கின்றது; அவ்விரண்டையும் காப்பது அவனுக்குச் சிரமத்தை உண்டாக்குவதில்லை - அவன் மிக உயர்ந்தவன்; மகிமை மிக்கவன்.

இதன் மூலம் நம்மையும், இந்த அகில உலகங்களையும் படைத்து பரிபக்குவபடுத்துவது ஒரே இறைவனே, (தனித்தனி கடவுள் அல்ல) என்பது தெள்ளத் தெளிவானது. அல்லாஹ் என்ற வார்த்தை கடவுளை குறிக்கும் அரபிச் சொல்லே தவிர வேறில்லை. அல்லாஹ் என்ற அரபிச் சொல்லை உலக முழுமையும் உள்ள மக்கள் ஏன் பயன்படுத்துகிறார்கள் எனில் அச்சொல்லுக்கு மட்டும் ஆண்பால், பெண்பால், பலர்பால் கிடையாது என்றறிந்து மேலும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தேன்.

ஒரு மணி நேரம் அந்த குர்ஆனை நின்ற நிலையில் படித்தேன். பிறகு எனக்கு இரண்டு நாளைக்கு படிப்பதற்க்கு வேண்டும், கிடைக்குமா? என்று வினவ, தாராளமாக, என்று அங்குள்ளவர்கள் கூற, வீட்டுக்கு குர்ஆனை கொண்டு வந்தேன்

நான் படித்த இந்த வசனங்களை என் குடும்பத்தார்களுக்கு படித்துக் காட்டி, அதைப்பற்றி விவாதித்து, ஆலோசித்து கடைசியில் நாங்கள் அனைவரும் முழுமனதோடு இஸ்லாத்தை தழுவினோம். என்னுடைய தற்சமய பெயர் நியாஸ். அதன் பிறகு ஒரு மூன்று மாதம் குடும்பத்தார் அனைவரும் இஸ்லாத்தை பற்றி தெளிவர கற்க ஒரு கோர்ஸ்ஸில் சேர்ந்து படித்து எங்களுடைய ஞானத்தை அதிகரித்துக் கொண்டோம். எல்லா புகழும் இறைவனுக்கே!

நான் கடவுளை தேடிய பாதையையும், தேடிய உண்மையான இறைவனை கண்டு கொண்ட விதத்தையும் இதை படிப்பவர்களுக்கு விரிவாகவே சமர்ப்பித்திருக்கறேன்.

முடிக்குமுன்,

கீழ்க்கண்ட நான்கு கேள்விகளை நீங்கள் உங்களுக்குள்ளே கேளுங்கள்.

1. இறைவன் என்பவன் யார்? எதற்காக இந்த உலகை படைத்திருக்கிறார்?

2. நாம் (மனிதர்கள்) எதற்காக படைக்கப் பட்டிருக்கிறோம்.

3.நம் இஷ்டப்படி இந்த உலகில் வாழ்ந்து கொள்ளலாம் என்று விடப்பட்டிருக்கிறோமா? அல்லது இப்படித்தான் வாழனும் என்று வழி காட்டப் பட்டிருக்கிறோமா?

4. நம் மரணத்திற்க்கு பிறகு என்ன நடக்கும்?

இதற்கான விடைகளும் இன்னும் உங்களுக்குள் எழும் எந்த கேள்வியானாலும் குர்ஆன் எளிதில் பதில் கூறும்.

குர்ஆன் ஒரு அற்புதம். உண்மையை தேடுபவர்களுக்கு ஒளிவு மறைவின்றி விடையளிக்கும்.

இதன் மூலம்.....

பலவிதமான மக்கள், பலவிதமான சூழ்நிலையில், பலவித முயற்சிகளின் பலனாக,(சிலருக்கு எதிர்பாராத விதத்தில்) மேற்கொண்ட உண்மையான கடவுளை தேடிய பயணத்தில் தாங்கள் கண்டுபிடித்ததை தங்களுடைய கோணத்தில் உங்களுக்கு விளக்கி இருப்பதை காணலாம்

சுய விளக்கம் கொடுத்தவர்கள் அனைவருமே வித்தியாசமான பின்புலத்தை, ஆராய்ந்து அறியும் மனப்பான்மையை கொண்டவர்கள் என்பதையும் காணலாம்.


எல்லோரும் முக்கியமாக ஒரு கருத்தை மிக வலியுறுத்தி கூறி முடித்து இருக்கிறார்கள். அதாவது, ஆராய்ச்சி செய்யுங்கள், முக்கியமாக குர்ஆனை கண்டிப்பாக படியுங்கள் என்று.

அதற்க்கு விடையளிக்கும் விதமாக பின் அட்டையில் குர்ஆன் மொழி பெயர்ப்பின் QR Code கொடுக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம், ஹிந்தி, கன்னடம், மலையாளம், தமிழ் மற்றும் தெலுங்கு மொழியில் டவுன்லோடு செய்து கொள்ளலாம்.

அச்சிடப்பட்ட குர்ஆன் பிரதி வேண்டுபவர்கள் 88388 92393 என்ற நம்பரை தொடர்பு கொள்ளவும்.

மேலதிகமாக உண்மை இறைவனை தேடியவர்களின் சுயவிளக்கம் (Testimonials) கேட்க விரும்புவோர் கீழ்க்கண்ட QR Code ஐ Scan செய்யவும்.









இறைத்தூதர் முஹம்மது யார் ?

(இறைவனால்) அனுப்பப்பட்ட இறைத்தூதர்களில் நான் புதிதாக வந்தவனல்ல. (எனக்கு முன்னர் இறைத்தூதர்கள் பலர் வந்தே இருக்கின்றனர்.) மேலும் என்னைப் பற்றியோ அல்லது உங்களைப் பற்றியோ என்ன செய்யபடும் என்று எனக்கு தெரியாது. (இறைவனால்) எனக்கு அறிவிக்கப்பட்டதை மட்டுமே நான் பின்பற்றுகிறேன். நான் (நம் செயல்கள் பற்றி விசாரிக்கப்படும் நியாயத் தீர்ப்பு நாளைப் பற்றி) தெளிவாக எச்சரிப்பவன் மட்டுமே, என்று கூறுவீராக !
(குர்ஆன் 46:9)








The Quran
English, Hindi, Kannada, Malayalam, Tamil & Telugu
bit.ly/the-qurans



ஒரு தெய்வமா ?
பல தெய்வமா ?
scan


இறைதூதர் முஹம்மத்ஸல்)
வாழ்க்கை வரலாறு & படிப்பினைகள்.


உண்மையான
இறைவனை
தேடுபவரா நீங்கள்?


இயேசு, மேரி பற்றி
குர்ஆன் கூறும் உணமைகள்


இறைவன்
இருக்கின்றானா ?
நேரில் காட்சி
தருவானா ?


Are you also
a seeker of
True God?


Truths told in
Quran about
Jesus & Mary


Does God exist?
Will He show up?